
# பூவரசு



*Poovarasu.*

புரட்டாதி 1995.

உள்ளே:

**தமிழர்கள் திருப்பியனுப்பப்படலாம்!**

ஒரு அகதியின் குறிப்புக்களிலிருந்து...

உ
சிவமயம்

# தமிழருவியின் அனுசரணையுடன்
# டோட்முண்ட்
# சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தினர்
மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும்
# மாபெரும் சைவசமய அறிவுப்போட்டி!

1. வினாவிடைப் போட்டி(எல்லா வயதினரும்)
2. பேச்சு போட்டிகள்(மூன்று பிரிவு)
3. திருக்குறள் மனனப் போட்டி (மூன்று பிரிவு)

போட்டியில் பங்குபற்றி சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் சாந்த நாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய மூன்றாவது ஆண்டு விழாவின்போது வழங்கப்படும்.

போட்டியாளர்களின் நலனை கருத்தில்கொண்டு பேச்சுப்போட்டியும், திருக்குறள் மனனப்போட்டியும் நடைபெறும் இடங்களும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

திருக்குறள் மனனப்போட்டியிலும் பேச்சுப்போட்டியிலும் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் கீழ்வரும் முகவரிக்கு 01.10.1995 க்கு முன்னர் விண்ணப்பங்கள் கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முழுப்பெயர், விலாசம், பிறந்ததிகதி, ஆகியவற்றைத் தெளிவாக எழுதியனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு —
T.RAVEENTHIRAN,
BORNSTR.147,
44145 DORTMUND/GERMANY.
Tel: 0231/811621.

இனிய தமிழ் ஏடு

**உலகமே நம் இல்லம்**
**உள்ளமெல்லாம் நம் சொந்தம்.**

# பூவரசு

**இதழ்: 33**
**புரட்டாதி: 1995**

Poovarasu
**Tamilische Kultur magazin**
September´95


**Poovarasu,**
**Sinniah Maheswaran,**
**Otto Brenner Allee 56,**
**28325 Bremen,**
**Germany.**


***உள்ளே......***


***தோமாஸ்வெல்.***
***வீ. ஆர். வரதராஜா.***
***இராஜன் முருகவேல்.***
***இந்துமகேஷ்.***
***வலன்ரைன்.***
***இராஜகாந்தன்.***
***தமிழ்க்குருவி.***
***விஜயானந்தா.***
***பவன்.***

# வாழ்த்தும் நெஞ்சங்கள்!

பூவரசு இதழ்களைக் கண்ணோட்டமிட்டேன்.
நல்ல சீரியமுறையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைந்திருக்கின்றது.
கட்டுரைகளும் கவிதைகளும் காலத்திற்கு ஏற்றதாகவே
அமைந்துள்ளதில் மகிழ்ச்சியே!
இது ஊக்குவிப்பு மலராகவே மலர்ந்துள்ளதாக அறிகின்றேன்.
வாசகர்களின் நிலைப்பாட்டுணர்வை முக்கியமாகக்கொள்ளாமல்,
வாசகர்களின் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படவேண்டுமென்ற
எண்ணமே உங்களைத் தழுவியுள்ளதாக உணர்ந்தேன்.
உண்மை மொழித் தொண்டினைக்கண்டு களிப்புற்றேன்.
தொடர்க அரிய தமிழ்ப்பணி.
பொதுவாக தமிழ் ஏடுகள் போடுவதென்பது யானையைக்கட்டித்
தீனிபோடும் கதைதானே.
பல்வேறு இடையூறுகளுக்கும் இடையே இப்பணியைச் சோர்வின்றி
செய்திடும் தங்களின் தொண்டினைக்கண்டு வியக்கின்றேன்.
தொடர்ந்து எனக்கு பூவரசு இதழை அனுப்பிடுங்கள்....

அன்புடன்,
சீ. அருணாசலம்,
பகாங், மலேஷியா.

பூவரசு இதழைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன்.
பல அம்சங்கள் அதில் இடம்பெறுவதும்-சமூக விழிப்புணர்வு
எண்ணங்கள் ஊடகமாகக் காணப்படுவதும் பூவரசு வளர்ச்சிக்கு
முக்கிய காரணம் என எண்ணுகிறேன்.
கலை இலக்கிய எண்ண ஆர்வலர்களின் கருக்கள் சமூக, அரசியல்,
பொருளாதார மாற்றத்திற்கு ஒரு வடிகாலாக இருக்க வேண்டும்
என்பதில் அதிக அக்கறை கொண்டவன் நான். இத்தகைய
ஊட்டச்சத்துக்கள் தங்கள் இதழ்களில் தொடரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன்,
கீழ்கரவை பொன்னையன்,
பிரான்ஸ்.

# கையெழுத்துப் பிரதிகள் 1985-1995
## சிறப்பிதழ்.

இந்தப் பத்தாண்டுகால இடைவெளியில்
புலம் பெயர் நாடுகளில் வெளியான தமிழ்
கையெழுத்துப் பிரதிகளிலிருந்து சிறந்த
ஆக்கங்களைத்தொகுத்து
பூவரசு வெளியிடவிருக்கும் சிறப்பிதழுக்கு
கையெழுத்துப்பிரதிகளில் எழுதிய
படைப்பாளர்களிடமிருந்தும்
வெளியீட்டாளர்களிடமிருந்தும்
ஆக்கங்களை வரவேற்கிறோம்.

வாசகர்களும்
தாங்கள் படித்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்து
சிறந்த ஆக்கங்களைத் தெரிவுசெய்து
அனுப்பலாம்.
இதுவரை வெளிவந்த
கையெழுத்துப்பிரதிகளில்(சஞ்சிகைகளில்)
உங்களுக்குப்பிடித்த ஆக்கத்தின்மீது
புள்ளடியிட்டு
குறிப்பிட்ட அந்தச்சஞ்சிகையையும் இணைத்து
பூவரசு முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
இயலுமெனில் அந்தச் சஞ்சிகைபற்றிய குறிப்புக்களையும்
(வெளிவந்தகாலம், வெளியீட்டாளர், நோக்கங்கள்பற்றியவை)
இணைத்து அனுப்பலாம்.

விரைவாக அனுப்பிவைத்தீர்களாயின்
**விரைவில் சிறப்பிதழ் வெளியாகும்.**

Poovarasu
Sinniah Maheswaran
Otto Brenner Allee 56
28325 Bremen
Germany.

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

## 5வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் சிறுகதை கவிதை கட்டுரைப்போட்டிகள்!

### 1. சிறுகதை.

கதைக்கான கரு எதைப்பற்றியதாகவும் இருக்கலாம். பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 6 பக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாகவும், சொந்தப்படைப்பாகவும், இதுவரை பிரசுரமாகாததாகவும், மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இல்லாததாகவும் கதைகள் அமையவேண்டும்.

### 2. கவிதை.

"புலம்பெயர்ந்து வந்ததனால்..."
இந்தத் தலைப்பில் கவிதைகள் வரையப்படவேண்டும். பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 2பக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாக கவிதைகள் இருத்தல்வேண்டும்.

இனிய தமிழ் ஏடு.

## 3. கட்டுரை.

நீங்கள் விரும்பும் ஒரு தலைப்பின்கீழ்
கட்டுரைகள் வரையப்படலாம்.
புலம்பெயர் நம்மவர் வாழ்வின் நிலைபற்றி
கட்டுரைகள் வரையப்படுவது விரும்பத்தக்கது.
கட்டுரை பூவரசு இனிய தமிழ் ஏட்டில்
5 பக்கங்களுக்குள்
அடங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

*போட்டிகளுக்கான பொது விதிகள்.*

*1.போட்டிகளில் கலந்து கொள்ள வயதெல்லை இல்லை.*
*2.ஆக்கங்கள் தாளின் ஒருபுறமாக மட்டும் தெளிவான எழுத்தில் அல்லது தட்டெழுத்தில் எழுதப்பட வேண்டும்.*
*3.போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவத்தில்மட்டுமே ஆக்கதாரரின் பெயர் முகவரி என்பன எழுதப்பட வேண்டும்.*
*(ஆக்கங்களின்மீது ஆக்கதாரரின் பெயர் முகவரி என்பவற்றை எழுத வேண்டாம்.)*

---

*போட்டிகளுக்கான இறுதித் திகதி 31.10.1995 ஆகும்.*
*(எக்காரணத்தை முன்னிட்டும் போட்டிகளுக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதைத்தயவுசெய்து கவனியுங்கள்)*
*விண்ணப்பப்படிவங்கள் நடுப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளன.*

---

**வாசகர்களுக்கான சிறப்புப் போட்டி!**

**இந்த ஐந்தாண்டுப் பருவம்வரை**
**பூவரசுமீது அக்கறைகாட்டிவந்திருக்கும் வாசகர்கள்**
**அதன் குறைநிறைகளை மனந்திறந்து**
**ஒரு கட்டுரைவடிவத்தில் அல்லது**
**கவிதைவடிவத்தில் எழுதலாம்!**
**எழுதப்படும் ஆக்கத்துக்கு**
**'பூவரசுபற்றி நான்...!' என்னும் தலைப்பிடுங்கள்!**
**தேர்ந்தெடுக்கப்படும் 3 கட்டுரைகள்**
**சிறப்புப்பரிசுகளைப்பெறும்.**

**ராட்டிங்கன் தமிழர் புனரமைப்பு ஒன்றியத்தின்**

# 4வது ஆண்டு நிறைவு விழா!

பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடன, நாடக, இசைக்கலைஞர்கள் பங்குகொண்டு சிறப்பித்த, ராட்டிங்கன் புனரமைப்பு ஒன்றியத்தின் 4வது ஆண்டு நிறைவுவிழா 12.08.1995 சனிக்கிழமை
ராட்டிங்கனில் சிறப்புற நடைபெற்றது.
திருமதி செல்லக்குமார்,திருமதி இந்துமகேஷ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தனர். தாயக விடுதலைக்காக தமது இன்னுயிர்நீத்த தியாகதீபங்களுக்கு மௌன அஞ்சலி செய்யப்பட்டதன் பின்னர் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.
சங்கீதபூஷணம் திருமதி மீனலோசனிசண்முகராஜா தமிழ்மொழிவாழ்த்தையும் ஒன்றியகீதத்தையும் இசைத்தார்.
திரு ஆர்.சத்தியதாஸ் வரவேற்புரை வழங்கினார்.
ஒன்றியத்தினால் கடந்தமாதம் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில்
வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பைத்தொடர்ந்து டாக்டர் வி.ரி. இளங்கோவன், திரு கே.ரி.கணேசலிங்கம், திரு ஏ.கே.நாகராஜா, திரு டேவிட்சிங்கோ, திரு.ஏ.சத்தியமூர்த்தி, ஆகியோரின் சிறப்புரைகள் மெயபுஸ் ஆடற்கலையரசி திருமதி ரஜனிசத்தியகுமாரின் மாணவமாணவிகள் வழங்கிய பரதநாட்டியம், டோட்முண்ட் நாட்டிய கலாலய ஆசிரியை செல்வி அன்பரசி சிவதாசன் தயாரித்துவழங்கிய நாட்டியநிகழ்ச்சி என்பன விழாவுக்கு மெருகூட்டின. ராட்டிங்கன் தமிழ்ப்பாடசாலை மாணவர்கள், ஜேர்மனியின் புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள் ஆகியோரின் திரையிசை நடனங்களும் இடம்பெற்றன.
டாக்டர் வி.ரி.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற "இனிதாயெழும் பயிர்கள்!" கவியரங்கம் தாயக விடுதலைக்காய்த் தம்முயிரைப் பணயம் வைத்துப் போராடும் இளைய தலைமுறையின் புகழ்பாடிற்று.
திருமதி கோசல்யா சொர்ணலிங்கம், திரு.இ.சம்பந்தன், திரு.நா.தேவதாசன், திரு.எழிலன், திரு. ஐ.சொர்ணலிங்கம், திரு.குமரன், திரு.கே.சிவானந்தன் ஆகியோர் கவியரங்கில் கலந்து சிறப்பித்தனர்.
அடுத்து இடம்பெற்ற "இன்று வீட்டை ஆள்பவர்கள் ஆண்களா பெண்களா?" என்னும் தலைப்பிலான பட்டிமன்றத்தில் திரு.சிறீஜீவகன், திரு. பாலசுப்பிரமணியம், திரு பாபு, திரு.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு வாதாடினர். "இன்று வீட்டை ஆள்பவர்கள் பெண்களே!" என்று நடுவர் திரு.குமரன் தீர்ப்பு வழங்கினார்.
அடுத்து ஆண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழருவி ஆசிரியர் திரு நயினை விஜயன் மலரை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை திரு எஸ்.செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

"விகடமாமணி" ஐசாக்இன்பராஜா சோஸ்ற் அபூர்வசகோதரர் கலைஞர்களுடன் இணைந்து வழங்கிய "வருவார்,வருகிறா,வந்தான்!" நகைச்சுவை நாடகம் இரசிகர்களைச் சிரிக்கவைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது. பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்தது பாராட்டப்பட வேண்டியதே! எழுத்தாளர் திருமதி புஷ்பராணி ஜோர்ஜ் தான் ஒரு சிறந்தநடிகை என்பதையும் இந்நாடகத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார்.
விழாவின் சிறப்பம்சமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சங்கீதபூஷணம் திரு பொன். சுபாஷ்சந்திரன் அவர்களின் மெல்லிசை நேரக்கட்டுப்பாடு காரணமாகக் குறுக்கப்பட்டபோதிலும் இசைக்கப்பட்ட பாடல்கள்அனைத்தும் இனிமையாக இருந்தன.அண்மையில் கனடாவில் வெளியிட்டுவைக்கப்பட்ட பொன் சுபாஷ் சந்திரனின் இனியபாடல்கள் அடங்கிய இசைத்தட்டு "என்மனசு பாடுது" (CD) விழாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பூவரசு ஆசிரியர் இந்துமகேஷ் புனரமைப்பு ஒன்றியத்தின் சேவைகளைப்பாராட்டியதோடு மேலும் அதன் பணிகள்தொடர ஒன்றுபட்டு உழைக்குமாறு ஒன்றியத்தினரையும் ராட்டிங்கன்வாழ் தமிழ்மக்களையும் கேட்டுக்கொண்டார். அண்மையில் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு செல்வகுமாரின் கலையார்வமும் விடாமுயற்சியும் இந்தவிழாவைச் சிறப்புறச் செய்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஒன்றியச் செயலாளர் திரு நா. கதிர்காமநாதன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.
நிகழ்ச்சிகளை "செந்தமிழ்ச்சொல்வளவன்" திரு.என்.ரி.ஜெகன் தமது மதுரக்குரலால் அழகுறத்தொகுத்து வழங்கினார்.

(விழாநிகழ்ச்சிகளை முழுதுமாய் இரசிக்கும்வண்ணம் நேரம் திட்டமிடப்படாதது ஒரு குறையே! இனிவரும் காலங்களில் எல்லா விழா அமைப்பாளர்களும் இக்குறையை நிவர்த்தி செய்வார்களா?)

— விஜயா.

---

**"மதுரகவி" திரு வி. கந்தவனம் அவர்கள்**
பூவரசு இதழுக்கு வழங்கிய
**சிறப்புப் பேட்டி**
அடுத்த இதழில்!

---

# தமிழர்கள் திருப்பியனுப்பப்படலாம்?

"வடக்குக்கிழக்கில் மிகவும் மோசமான நிலையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மண்டைதீவு இராணுவமுகாம் தாக்குதலின்போது நூற்றுக்கணக்கான தானியங்கு ஆயுதங்களும் இலட்சமளவில் ரவைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.எல்லாளன் படையினரால் கொழும்பிலும் குண்டுவெடித்தல் சம்பவங்கள் நடைபெற்றன. அரசுதரப்புச் செய்திகளின்படி இவற்றில் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.ஆறுகளில் சில சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இது முன்னர் இருந்தே இரகசியமாக இயங்கி வரும் விசேட இராணுவப்படையினரால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. எனினும் அரசு சமாதானமுறையையே விரும்புகிறது. கைது செய்யப்படுவோர் புலிகள் என்று சந்தேகப்பட்டாலேயன்றி 40 வயதுக்குட்பட்ட இளைஞராயிருந்தாலும் ஆபத்தின்றி விசாரணையின் பின் விடுதலை செய்யப்படுகின்றார். எனவே தமிழர்கள் இலங்கைக்குள்ளேயே அகதியாக புகலிடம் செல்ல வசதியுண்டு."

— கடைசியாகக்கொடுத்த தகவலில் இவ்வாறு ஜேர்மன் தூதராலயம் அறிவித்துள்ளது.

இதற்கு முதல் கொடுத்த தகவல்களில்

"ஜேர்மனிலிருந்துதமிழர்கள் தம் வியாபாரநோக்கத்துக்காக, திருமணம் செய்வதற்காக அல்லது தமது குடும்பத்தைப்பார்ப்பதற்காக கொழும்பு வந்து போகிறார்கள். அவர்களிடம் நீங்கள் இங்கு வரும்போது பிரச்சினையில்லையா எனக்கேட்டபோது இல்லை என்றுகூடச் சொல்லியுள்ளார்கள். இவர்களிடம் Aufenthaltsbefugnis, Aufenthaltserlaubnis (ஜேர்மனியின் வதிவிட அனுமதிகள்) உள்ளன. கொழும்பில் சிலர் கைது செய்யப்படுவது என்னவோ உண்மையாக இருந்தாலும் அவர்கள் மீண்டும் விசாரணையின்பின் விடுதலை செய்யப்படுகிறார்கள். அவர்கள் கொழும்பில் வதிக்கும் வீட்டை பொலிஸில் அறிவிக்காமல் இருந்தாலோ அல்லதுஅடையாள அட்டையில்லாமல் இருந்தாலோ கைது செய்யப்படலாம். ஆனால் அவர்களுக்கு பண அபராதம் மட்டுமே.

இதைத்தவிர UNO (ஐக்கிய நாடுகள் சபை) கொடுத்த தகவலில்

"இங்கிருந்துசெல்வோர்(திருப்பிஅனுப்பப்படுவோர்)ஒரு செல்லுபடியாகா கடவுச்சீட்டு இல்லாமல் இருந்தால் பிரச்சனைகள் உண்டு!" என அறிவித்துள்ளது.

இந்தத் தகவல்களை வைத்து ஜேர்மன் காரியாலயங்கள் தமிழர்களின் அகதி விண்ணப்பங்களை நிராகரித்து நாட்டுக்குத் திருப்பி அனுப்ப

யோசித்துள்ளன.

இதுவரை தமிழர்களைப்பொறுத்தவரை எதுவிதமுடிவும் எடுக்காமல் (எடுக்க முடியாமல்) இருந்தவர்கள் இத்தகவலை சேகரித்ததற்கு நாங்களே காரணம் என்றுகூட சொல்லலாம்.

இந்தத் தகவல்களில் முழுமையான உண்மை இல்லை. ஏனெனில் எமக்குத்தெரிந்த அளவில் பிரச்சினை அதிகரித்துள்ளது.கொழும்பில் கைதுசெய்யப்படுவோர் அதிகரித்துள்ளனர். அவர்களில் பலர் மாதக் கணக்காக விசாரணையின்றி காணாமல் போய்விட்டனர். சிலர் இறந்துவிட்டார்கள் என்றுகூடக் கூறப்படுகிறது. ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பும் நோக்கத்தில் பிறேமன் நகரம் முதலாக நிற்கிறது. எனினும் இதுவரை எவரையும் திருப்பி அனுப்ப முடியவில்லை. ஒரு சிலர் தலைமறைவாகியுள்ளனர். கடவுச்சீட்டு இல்லாதோருக்கு தாமாகவே கடவுச்சீட்டு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக்கொண்டு பிரயாணத்திற்குரிய திகதியையும் அவர்கள் குறித்தபின்னரே சிலர் தலைமறைவாகியுள்ளனர்.

தமிழர்கள் கடவுச்சீட்டு விண்ணப்பித்தால் மாதக்கணக்கான காலத்தையும் பெரும்தொகையான பணத்தையும் அறவிடும் ஸ்ரீலங்காத் தூதராலயம் போர்க்குடன் ஒருசிலகிழமைக்குள் தற்காலிக கடவுச்சீட்டை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழர்களைத் திருப்பியனுப்பும்நோக்கத்தில் சட்டத்தரணிகள்கூடஒத்துழைக்கின்றனரா என்று சந்தேகப்படும்வகையில் சில சட்டத்தரணிகள் நடந்துள்ளனர்.

(இதுபற்றி சில அனுபவங்களும் சட்டத்தரணிகளின் கருத்துக்களும் தொடரும் இதழ்களில் இடம்பெறும்)

— ஒரு அகதியின் குறிப்புக்களிலிருந்து.

---


விரைவில்!

உங்கள் அபிமான எழுத்தாளர்

இராஜன் முருகவேல் எழுதும்

**கைக்கெட்டாத கைமாத்துக்கள்**

(தொடர்நவீனம்)

பூவரசு தருகிறது!


---

# பிறமொழியும் கற்போம்.

*டொச்-தமிழ் பாடத்தொடர் 4.* **-தோமாஸ் வெல்.**

**Die Uhrzeiten-நேரம்.**

**vor-**முன்பு, **nach-**பின்பு
**7.00Uhr = sieben Uhr**
**7.05Uhr = fünf(Minuten)nach sieben**
ஏழுமணி ஐந்து நிமிடம் எனச்சொல்லும்போது **Sieben Uhr fünf Minuten**
அல்லது **fünf nach sieben** என்றோ அல்லது **fünf Minuten nach Sieben** என்றோ சொல்லலாம்
**7.10Uhr = Zehn (Minuten)nach sieben**
ஏழுமணி 10நிமிடம்.
**7.15 Uhr= Viertel nach sieben.**(ஏழேகால்)
**Viertel=** கால் மணித்தியாலம்.
அல்லது **sieben Uhr fünfzehn Minuten** ஏழுமணி 15 நிமிடம்.
**7.25 Uhr = fünf vor halb acht**
ஏழரைக்கு ஐந்து நிமிடங்கள்.
அல்லது **sieben Uhr fünfundzwanzig Minuten**
ஏழு மணி **25** நிமிடங்கள்.**fünfundzwanzig nach Zieben** என்றும் சொல்லலாம்.

**7.30 Uhr= halb acht** எட்டு மணிக்கு அரைமணித்தியாலம். அதாவது ஏழரை.
**7.40 Uhr= Zehn nach halb acht** அல்லது **Zwanzig vor acht** இரண்டுவிதமாகவும் சொல்லலாம்.
**7.45 Uhr= Viertel vor acht** எட்டுமணிக்கு கால் மணித்தியாலம். ஏழுமணி 45 நிமிடங்கள்.

**Morgen=** காலை, **Mittag=** மத்தியானம், **Nachmittag=** பிற்பகல்
**Abend=**மாலை, **Nacht=** இரவு.
பகல் **12** மணிக்கு பின்னர் காட்டும் நேரங்களை **13.00, 14.00, 15.00, 16,00, 17.00, 18.00, 19.00, 20.00, 21.00, 22.00, 23.00, 24.00Uhr** எனச் சொல்வோம்.

---

Woher? = எங்கிருந்து? Wo? = எங்கே?
Wohin? = எங்கே?(நோக்கி)

Woher kommt er? எங்கிருந்து அவன் வருகின்றான்?
Er kommt von Srilanka அல்லது aus Srilanka.
அவன் ஸ்ரீலங்காவிலிருந்து வருகிறான்.

von
இருந்து.
aus

Wo ist er?
எங்கே அவன் இருக்கிறான்?
Er ist in Singapore.
அவன் சிங்கப்பூரில் இருக்கிறான்.
Er fährt nach Malasiya
அவன் மலேஷியாவிற்கு (காரில்)போகின்றான்.

Woher kommt Shanthy?
சாந்தி எங்கேயிருந்து வருகின்றாள்?
Shanthy kommt von der Schule அல்லது
aus der Schule.
சாந்தி பாடசாலையிலிருந்த வருகின்றாள்.
Shanthy ist in der Schule.
சாந்தி பாடசாலையில் இருக்கின்றாள்
Wohin geht Shanthy?
சாந்தி எங்கே போகின்றாள்?
Shanthy geht in die Schule.
சாந்தி பாடசாலைக்குப் போகின்றாள்.
Er kommt von seinem Onkel.
அவன் தன்னுடைய(அவனுடைய)மாமாவிடமிருந்து வருகின்றான்.
Er ist bei seinem Onkel.
அவன் அவனுடைய மாமா வீட்டில் இருக்கின்றான்.
Er geht zu seinem Onkel.
அவன் அவனுடைய மாமாவிடம் போகின்றான்
Das Bild hängt an der Wand.
படம் சுவரில் தொங்குகின்றது.
Ich hänge das Bild an der Wand.
நான் படத்தை சுவரில் தொங்க விடுகின்றேன்.
die Wand= சுவர்.

தொடர்ச்சி 50ம்பக்கம்.

# இலக்கிய முத்துக்குளியல்

— வீ.ஆர்.வரதராஜா.

தமிழரின் வாழ்வில் குறிப்பாக இந்துக்களின் வாழ்வில் இடம்பெறும் பெரும்பாலான சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு அர்த்தம் உண்டு. கணவன், மனைவி, தம்பி, தங்கை, தாய், தகப்பன், அண்ணன், அக்கா, மாமன், மாமி, பெரியப்பா, பெரியம்மா என வாழ்வில்வரும் சகல உறவுகளும் செய்ய வேண்டிய பணிகள் எழுதப்பட்டுள்ளன.
அவரவர் அந்தந்தப் பணிகளைச் செய்வாராயின் மகிழ்ச்சியானதொரு குடும்பம் சிறப்பானதோர் சமூகம் உருவாகும் என்பதே அர்த்தமுள்ள இந்துமதம் கூறும் தத்துவமாகும். தாங்கள் செய்யவேண்டிய பணிகளை விடுத்து மற்றவர் பணிகளில் தலையிடும்போதுதான் பிரச்சனைகள் ஆரம்பிக்கின்றன.
இவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டு அல்லல்படுவதை இந்த மனிதகுலம் ஏன் விரும்புகின்றது? இராமாயணமும் இதைப்பற்றி பல கோணங்களில் நின்று ஆராய்கின்றது. அவற்றின் ஒரு சில துளிகளை நாமும் அவதானிப்போம்!

தம்பிடம்
கடன்பட்டார்.

சீதாதேவியை இராவணன் கவர்ந்து சென்றுவிட்டான். சீதையைத்தேடி இராம லட்சுமணர்கள் காடுமலை யாவும் சுற்றியலைகிறார்கள்.
சீதை அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை.
ஒருநாள் நடுநிசி. இராமருக்குத் தண்ணீர் தாகம் ஏற்படுகின்றது. அவர் தமக்குப் பணிவிடைசெய்யும் லட்சுமணனை அழைக்கின்றார். லட்சுமணன் அண்ணனின் கட்டளையை சிரமேற்கொள்கின்றார்.
இராமர் தனக்குத் தண்ணீர் தேவை என்று கேட்டதும் இரவாயிற்றே என்று கூட யோசியாமல் இலட்சுமணன் உடனே புறப்பட்டுப்போனான். தண்ணீர்தேடி இலட்சுமணன் பல இடங்களில் அலைந்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. அதேவேளை களைப்பாயிருந்த இலட்சுமணனை 'அயோமுகி என்ற அரக்கி கவர்ந்து சென்று விடுகிறாள்.
தம்பிசென்று நெடுநேரமாயிற்றே இன்னும் அவன்வரவில்லையே என்ன காரணம்? அவனுக்கு என்ன ஆயிற்றோ என்று இராமர் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு அப்போது தோன்றியது — தனக்காக தம்பி இலட்சுமணன் உழைக்கிறான். பணிகளைச் செய்கிறான். தான் எது சொன்னாலும் கேட்டுச் சரியாகச் செய்கிறான். என்மேல் அவனுக்கு எத்தனை அன்பு! தனக்கு மறுபிறவி இருந்தால் நான் இலட்சுமணனுக்குத் தம்பியாகப்பிறந்து அவனுக்குப்

பணிவிடைகள் செய்யவேண்டும் என்று விரும்பினார் இராமர்.
பின்பு இராமர்போய் அரக்கியிடமிருந்து இலட்சுமணனை மீட்டுவந்தார்
இராமாவதாரம் முடிந்த பின்னர் பகவான் கிருஷ்ணனாய் அவதரித்தார். அவர் முற்பிறப்பில் எண்ணியதுபோலவே இலட்சுமணன் இந்தப்பிறப்பில் அவருக்கு அண்ணனாக அவதரித்திருந்தார். அவர்தான் பலராமர்.
பலராமருக்கு கிருஷ்ணன் பணிவிடைகள் செய்து மகிழ்ந்தார்.

**நான் பார்ப்பது பொருளல்ல —
உள்ளம்.**

சீதையைப் பிரிந்த இராமர் தம்பியுடன் பம்பா நதி தீரம் வந்தடைகிறார்.
அங்கே மதங்க முனிவரின் ஆசிரமத்தில் வாழ்ந்து வருகிறாள் சபரி என்ற ஏழைக்கிழவி. தவமிருப்போருக்கு பணிவிடை செய்வதையே வாழ்க்கையாகக் கொண்டவள் சபரி. அதிலேயே அவள் காலமெல்லாம் கழிந்துவிடுகிறது.
உடல்தளர்ந்து மூச்சொடுங்கிப்போன பிறகும் பல்லைக்கடித்துக்கொண்டு உயிர் வாழ்ந்துவருகிறாள்.
சபரிக்கு உயிர்விடுமுன் ஒரு விருப்பம்.
இராமரை ஒருமுறை தரிசித்துவிடவேண்டும்
என்பதுதான் அந்த விருப்பம்.
ஏனென்றால் திருமால்தான் இராமனாக அவதாரமெடுத்து வந்திருக்கிறார் என்ற இரகசியத்தை மதங்க முனிவர்மூலமாக அறிந்து கொண்டிருந்தாள் அவள்.
நடமாடக்கூட சக்தியற்றுக்கிடந்த சபரி, இராமரைக்கண்டதும் புத்துயிர் பெற்றவளாக எழுந்து அவருக்குப் பணிவிடைசெய்தாள்.தனக்கென்று பொறுக்கி வைத்திருந்த நாவற்பழங்களில் புளிக்காத பழங்களாகப்பார்த்து எடுத்து அவற்றையே இராமருக்கு விருந்தாகப்படைத்தாள்.
"இராமா! என்னால்முடிந்தது இவ்வளவுதான்!உன்னை விமரிசையாக உபசரிக்க எத்தனையோபேர் இருக்கிறார்கள் என்றாலும் — நான்செய்த புண்ணியத்தின் பலனாக என்னிடம் உபகாரம் பெற வந்திருக்கிறாய்.! நான் தருவதைத் தட்டாமல் ஏற்று எனக்கு மோட்சம் அளி இராமா!" என்று வேண்டினாள் சபரி.
"அம்மா! கொடுக்கும்பொருள் என்னவென்று நான் பார்ப்பதில்லை. கொடுக்கும் உள்ளங்களின் தன்மையைத்தான் நான்கவனிப்பது வழக்கம்.என்னிடம் இருக்கிற அளவுகோல் அதுதான்.உண்மையில்இத்தனைபக்தியும் பற்றும்மிக்க உங்களைப் பார்த்ததில் எனக்கு வனவாசத்தின்பலனே கிட்டிவிட்டது!" என்று மகிழ்ச்சியுடன் கூறி அந்த நாவற்பழங்களை வாங்கி உண்டான்.

**இராமரும் ஆஞ்சிநேயரும்
எப்படிச் சந்தித்தார்கள்?**

ஆஞ்சிநேயர் இராமர் பக்தர்.சாதாரண பக்தர் அல்ல! உயிருக்கு உயிரான பக்தர் என்றே கூறவேண்டும்.ஆஞ்சிநேயரின் உயிரே இராமர்.
இவர்கள் இருவரும் முதன்முதலில் எங்கே எப்படிச் சந்தித்தார்கள்?
அதுவும் ஒரு ருசிகரமான சம்பவம்தான்!
இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனதும் அவனால் வெட்டுண்ட கழுகரசன் ஜடாயுவின்மூலம் இராமரும் இலட்சுமணரும் நடந்ததை அறிந்தனர்.

அடுத்து ஜயந்தன் என்னும் அரக்கனுக்கு சாபவிமோசனம் கொடுத்து அவன் வாயிலாகவே வானர அரசன் சுக்ரீவனைப்பற்றியும் சீதையைமீட்க அவனுடைய உதவியைப் பெறலாம் என்பது குறித்தும் தெரிந்துகொண்டார்கள். பம்பா நதிக்கரையில் ரிச்யமுக வனப்பகுதியில் சுக்ரீவன் தன் அண்ணன் வாலிக்கு அஞ்சி மறைந்துவாழ்வதாகக் கேள்வியுற்று அங்கு சென்று தேடினார்கள். வில் அம்புகளுடன் காட்டில் திரியும் இராம லட்சுமணர்களைத் தொலைவிலுள்ள மலையில் பதுங்கியபடி பார்த்த சுக்ரீவனோ அவர்கள் வாலியின் வீரர்களோ என்று சந்தேகித்தான். தன்னை சிறையெடுத்துச் செல்லத்தான்வந்திருக்கிறார்கள் என்று அஞ்சி நடுங்கினான்.

ஆனால் அருகிலிருந்த அவனுடைய அமைச்சர் அனுமன், "அவர்கள் அப்படிப்பட்டவர்களாகத் தெரியவில்லை!" என்று கூறினான். அத்துடன் இராமர் யார் என்பதையறிய அனுமான் அந்தணர்வேடத்தில் சென்று அவரைச் சந்தித்தான். இதுதான் முதல் சந்திப்பு.
அவதார நாயகனான இராமச்சந்திரமூர்த்தியைக் கண்டதுமே அனுமனின் உள்ளம் பரவசமடைந்தது.

போலிவேடத்தில் வந்த அனுமன், புரட்டு எதுவுமேபேசாமல் தான் யார்? எதற்கு வந்தார் என்ற உண்மையான விவரங்களைத் தெரிவித்ததுடன் இராமனைப் பற்றிக் கேட்டறிந்து அந்தக்கணமே அவரைப்புகழ்ந்தும் போற்றியும் துதித்தும் நான் அவருக்கு அடிமையானவன் என்பதாகச் சமர்ப்பித்துக் கொண்டுவிட்டார். தன் சுய உருவை வெளிப்படுத்தி சுக்ரீவனைச் சந்திப்பதற்காக இராம லட்சுமணர்களை தன் இரு தோள்களிலும் சுமந்து சென்றான்.
தன் தெய்வநாயகனைக் கண்டுகொண்ட கட்டுக்கடங்காதஉற்சாகம் அனுமனிடம் தெரிந்தது.

(இன்னும் வரும்)

---


படைப்பாளர்களுக்கு!

**நினைவிருக்கிறதா?**

**பூவரசு**

**ஐந்தாவது ஆண்டு நிறைவு**

**மலருக்கு**

**உங்கள் ஆக்கங்களை**

**அனுப்பி வைக்கவேண்டிய**

**இறுதித்திகதி**

**30.09.1995.**

**எழுதுங்கள்!**

பிறேமன் — தமிழர் விளையாட்டுக்கழகம் நடாத்திய
சுழல்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

கடந்த 05.08.1995 சனிக்கிழமை பிறேமன் தமிழர் விளையாட்டுக் கழகம் நடாத்திய சுழல்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 8 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

முதலாவது இடத்தைப் பெற்ற C.A.S.Hagen விளையாட்டுக் கழகம். சுழல்வெற்றிக்கிண்ணத்தையும் முதலாவது பரிசுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது.
இவ்விளையாட்டு அணி வீரர்கள் அனைவருக்கும் தங்க மெடல்கள் அணிவித்து, கௌரவிக்கப்பட்டனர்.
இரண்டாவது இடத்தை பேர்லின் விளையாட்டுக்கழகமும்,
மூன்றாவது இடத்தை எசன் விளையாட்டுக்கழகமும்,
நாலாவது இடத்தை பிறேமன் தமிழர் விளையாட்டுக் கழகமும் பெற்றன.
இச் சுற்றுப் போட்டியில் நடுவர்களின் தீர்ப்பின்படி, (Best goal shooter) சிறந்த பந்தாட்டவீரராக C.A.S.Hagen திரு. சுதர்சன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
சிறந்த பந்துகாப்பாளராக பேர்லின் விளையாட்டுக் கழகத்தின் திரு.சில்வெஸ்ரர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
சிறந்த விளையாட்டு வீரராக (Best player) பிறேமன் தமிழர் விளையாட்டுக்கழகத்தின் திரு. யேக்கப் றோய் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தகவல் — விஜயகுமார், செயலாளர்,

# கருகிய மொட்டுக்கள்

— இராஜன் முருகவேல்.

கதவைத் திறந்து புன்னகையுடன் வரவேற்றவளைப் பார்த்துப் பிரமித்துவிட்டேன். எவ்வளவு மாறிவிட்டாள். கடைசியாக இவளைச் சந்தித்துப் பத்துவருடங்களாவது இருக்கும்.

அன்று நாற்றுமேடையாக இருந்த நிலம், பூவும் பிஞ்சும் காய்களும் கனிகளும் விளைந்த தோட்டமாகியது. பெரிய மனுசியாகிவிட்டாள். கன்னக்கதுப்புக்களில் திரண்ட தசைகளில்கூட பெரிய மனிதத்தனம் பளிச்சிட்டது.

"உள்ளுக்கு வாங்கோ!" என்று என்னை வரவேற்றாள்.

"லட்சுமியா? எவ்வளவு மாறிவிட்டாய்?" என்று சொல்லி ஆச்சரியமாக அவளைப் பார்த்தேன்.

"லட்சுமிதான்!" என்று புன்னகை மாறாமல் கரிய முகத்தில் செம்மைபடரக் கூறியவள்,

"ஏன் மறந்துட்டீங்களா?" என்று கேட்டாள்.

"முழங்காலளவு பாவாடையில் தலை மயிரைக் கூட்டி அள்ளிக்கட்டிக்கொண்டு குறுகுறெண்டு ஓடித்திரியும் லட்சுமியை அல்லவா எதிர்பார்த்து வந்தேன். அமைதியாகநின்று என்னை ஆச்சரியப் படுத்துகிறாய்!" என்று பழையதுகளை நினைவில் நிறுத்தினேன்.



"இப்ப வயசாச்செல்லே?!" என்று இலேசான சிரிப்புடன் என்னை அன்பாகப் பார்த்தாள். அதில் பாசம் தெரிந்தது. பழசை மறக்கவில்லை என்ற பாவனை பொதிந்திருந்தது.

லட்சுமி ஜேர்மனிக்குவந்து ஒருமாதம்தான் இருக்கும். வரும்போது ஊரில் உள்ள அம்மா எனக்காக ஏதோ கொடுத்து விட்டிருந்தாளாம். கடிதம்போட்டிருந்தாள். அதுதான் லட்சுமியைத் தேடிவந்தேன். நான் வந்த நேரம் லட்சுமியின்கணவன் வீட்டில் இல்லை.தொழிற்சாலை ஒன்றில் வேலை. வேலைக்குச்சென்று விட்டான். லட்சுமிதான் தனியாக இருந்தாள்.

"இருங்கோவன்...."

"வீட்டை அழகாய் வைச்சிருக்கிறாய்!"

"யூஸ் குடிக்கிறியளே?"

"தேத்தண்ணிபோடப் பஞ்சியாக்கும்....!"

"இல்லை...குடிப்பியளோ தெரியாது..." என்று தயங்கினாள்.

"ஏன் லட்சுமி...தேத்தண்ணி குடிப்பன்தானே....அதுவும் நீ போட்டால்..."

தயக்கத்துடன் தடுமாறியவள் குசினிக்குள் சென்றுவெள்ளிக்கிண்ணம் ஒன்றில் தேனீர்கொணர்ந்து மேசையில்வைக்கப்போனாள்.

"கையிலை குடு லட்சுமி...நீ இப்பிடிக்குடுத்து எத்தினை வருசமாச்சு!"

"நீங்கள் பழைய ஞாபகத்திலை இருக்கிறியள்..."

"அப்பிடியான நாட்களை இனி எப்ப காணமுடியும் சொல்லு.அந்த இனிமையான அனுபவங்கள் எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கு!"

நான் கூறுவதையே அவதானித்துக் கொண்டிருந்தவள், என் பார்வையைச் சந்தித்ததும் தலையைத்தாழ்த்தினாள்.

□ □ □

அப்போது லட்சுமிக்குப் பன்னிரண்டு வயது இருக்கலாம். எனக்கும் அவளது வயதுதான். நான் பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்தேன். அவள் கையெழுத்துப் போடுமளவிற்குப் படித்திருந்தாள். தினமும் எனதுவீட்டுக்கு வருவாள்.முற்றம்கூட்டுவாள். மாட்டுத்தொழுவத்தைச் சுத்தம் செய்வாள்.மாடு ஆடுகளுக்கு வயலில் இருந்து புல்லுக் கொண்டுவந்து போடுவாள். நெல் அறுவடை காலங்களில் வயலிலும் வேலை செய்வாள். விராந்தையில் உள்ள பலகைக் கட்டிலில் இருந்தவாறு அவளையே நோட்டமிடுவேன். வேலை சொல்லும் அம்மாமீது ஆத்திரமாக வரும். வேலை இல்லாவிட்டால் லட்சுமி வரமாட்டாள் எனும்போது அம்மா செய்வது நியாயம்தான் எனத்தோன்றும்.

உழைப்பின்பலனோ என்னவோ அவளது கைகளெல்லாம் இரும்பு மாதிரிக் கடினமாயிருக்கும். செம்பட்டை அடித்த கூந்தலை வாரிப் பின்னால் வழித்துப் பழைய துணி நாடாவொன்றினால் முடிச்சுப் போட்டிருப்பாள்.

அம்மா வீட்டில் இல்லாத வேளைகளில் எங்கள்பாடு கொண்டாட்டம்தான்.

"லட்சுமி..."

"என்ன?..."

"சொக்கான் விளையாடுவமே?"

"அம்மா வந்தால் ஏசுவா"

"போடி...நீ கல்லுக் குறுணி பொறுக்கியா" என்று அதிகாரத்துடன் விரட்டுவேன். சின்னஞ்சிறிய கற்களைக் கையுள் அடக்கி, அந்தரத்தில் எறிந்து புறங்கையால் லாவகமாக ஏந்துவாள். அவளின் வேகத்துக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது. அவளுடன் போட்டிபோட்டு வெல்லமுடியாது. சினம்பொங்கும். ஆத்திரத்துடன்

விலகுவேன்.
அவள் சிரிப்புடன் எனக்காக கொக்கானில் கற்களைத்தவற விடுவாள். எனக்குத் தெரியும். என்றாலும் காட்டிக்கொள்ளமாட்டேன்.
"லட்சுமி...நான்தான் வெற்றி"
"வெற்றியைக் காய்ச்சிக்குடிக்கவா முடியும்?"
"போடி...!" என்று அவளின் தலையில் ஓங்கிக்குட்டுவேன்.
"ஆ...!"என்று வலியுடன் அலறுவாள்.அவளை அலறவிட்டு வேடிக்கைபார்ப்பதில் எனக்குள் அலாதி ஆனந்தம்.
"இனிமேல் விளையாட வரமாட்டன்."
"அதையும் பார்ப்பம்...!"
"பார்ப்பம்...!"என்று கோபம்காட்டி அம்மா வருவதைக் கண்டவுடன் நார்க் கடகத்தை எடுத்துக்கொண்டு மாட்டுக்கொட்டிலை நோக்கி விரைவாள்.
ஒருநாள் —
கைக்குள் எதையோ மறைத்து வைத்திருந்தாள்.
"என்னடி?"
"கண்டு பிடி பார்ப்பம்!"
"கைக்கை பொத்திவைச்சுக்கொண்டு கண்டு பிடி எண்டால்...எப்பிடி?"
"முள்ளுப் பற்றைக்குள்ளை கறுப்பியும் சிவப்பியும் நிண்டு சிரிச்சினம். அதுதான் இது!" என்று புதிர்போட்டாள்.
யோசித்தேன்.
விடை தெரியவில்லை.
"தெரியாது...சொல்லடி!" என்று கெஞ்சினேன்.
வெற்றிப் பெருமிதத்துடன் கைகளை அகலவிரித்துக் காட்டினாள். கறுப்பும் சிவப்புமாக ஈச்சம் பழங்களும் காய்களும்.
"இதுதான் அது!"
ஈச்சம்காயாக அவள் சிரித்தாள்.
வாங்கிச் சுவைத்தேன். சிவப்புக் காய்கள் கசந்தன.கறுப்புப் பழங்கள் இனித்தன.
லட்சுமியும் கறுப்புத்தான்.
"காய்களைச் சாப்பிடாதை. தொண்டை கட்டிப்போகும். உப்புத்தண்ணியிலை போட்டுவைச்சால் நாளைக்குப் பழுத்துவிடும்."
நாட்கள் நகர்ந்தன.
லட்சுமியும் நானும் வயல்வரப்புகளில் நடந்தோம். ஓடினோம். துள்ளினோம். குதித்தோம். மிளகாய்த்தோட்டத்தில் அவள் குந்தியிருந்து உழவாரத்தால் அறுகம் புல்லைச் செதுக்கும்போது நான் குறும்பு பண்ணினேன்.
"இப்ப வேண்டாம்... இருளமுந்தி நான் புல்லுச் செதுக்கிக் கடகத்தை நிறைக்க வேணும்...!"
அவள் கடகத்தினுள் போட்ட புல்லை எடுத்து வெளியே விசிறினேன்.
அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.சிறு மண்ணாங்கட்டி ஒன்றை எடுத்து என்னை நோக்கி வீசினாள். குறி தப்பாமல் எனது நெற்றியில் பட்டுத்தெறித்தது.
கோபத்துடன் அவளின் சட்டையைப் பிடித்து இழுத்தேன்.'டர்'ரென்று கிழிய என்னைத் தள்ளிவிட்டாள். நான் பின்புறமாக நிலைதடுமாறி விழுந்தேன். தலை வரம்பில் முட்டி வலியெடுத்தது.
அவளை முறைத்தவாறு துலாவின்கீழ் இருந்த முதிரைக் கல்லில்போய் அமர்ந்தேன். அவளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. சிறிது நேரம் என்னையே

உற்று நோக்கியவள் கண்களில் சிறிது கலக்கம் தோன்ற ஓடி வந்தாள்.
"நோகுதா?"
"போடி!"
"கேக்கிறனெல்லே..?"
"நீ என்னோடை கதையாதை...நானும் கதைக்கமாட்டன்."
"அப்பிடிச் சொல்லாதையடா நான் அழுவன்..."
"அழு...எனக்கென்ன..?"
"எங்கை...என்னைப்பார்த்துச் சொல்லு பார்ப்பம்!"
கிட்டவந்து என்னைத் தன் மார்புடன் சேர்த்தணைத்துப் பிடரியைத் தடவி விட்டவாறு கேட்டாள்.
அந்த அணைப்பின் மெல்லியவெப்பத்தில் என்னை மறந்த ஏதோ ஒரு உணர்வில் அவளை அப்படியே இறுக அணைத்துக்கொண்டபோது 'சீ!' என்று என்னை விலத்தி முகம் சிவந்தாள்.
அதன் பிறகு எங்கள் நெருக்கம் அதிகமாகியது.
தொட்டதுக்கு எல்லாம் அவளைச் சீண்டுவதும் நாண வைப்பதுமாகப் பொழுதுகள் கழிந்தன.
"லட்சுமி...எனக்கொரு ஆசை!"
"என்ன?"
"ஆருக்கும் சொல்லமாட்டியே?"
"ம்கூம்...!"
"எனக்குக்கொஞ்சம் கள்ளுக் கொண்டு வந்து தருவியா?"
"ம்...மாட்டன். அம்மாவுக்குத் தெரிஞ்சா அடிப்பா...!"
"அம்மாவுக்குத் தெரிஞ்சால்தானே? பின்வீட்டு வேலிப் பொத்துக்காலை கொண்டுவந்து வை. கோடிக்கை இருந்து குடிக்கிறன்..."
"வேண்டாம்... நீ கெட்டுப் போவாய்..."
"கொஞ்சம்தானேடி!"
"மாட்டன்..."
"கொண்டராட்டில் இந்தப்பக்கம் வரவிடமாட்டன்..."
"என்ன நீ...?"
"பயப்பிடாதை... ஆசைக்குத்தானே கேட்கிறன்"
"கொஞ்சம்தான் கொண்டருவன்...சோடாப் போத்திலுக்கை..."
"போத்திலோடை எப்பிடிக் குடிக்கிறது?"
"சிரட்டையை எடுத்து வேலி மூரிக்கை சொருகி வை!"
"சரிடி...என் சாமத்தியம்!"
இவ்வாறே சென்று மறைந்த பொழுதுகளுக்குத்தான் எவ்வளவு அவசரம்.?!
திடீரென அவள் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டாள்.
சில நாட்களாக எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.
பிரமை பிடித்தமாதிரி இருந்தது.
'எங்கே அவள் என்றே மனம்
தேடுதே ஆவலாய் ஓடிவா!'
அவள் பெரிய மனுசியாகி விட்டாளாம்.
அம்மா யாரிடமோ கூறினாள்.
அதன் பின்னர் அவளைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.
என்றாலும் அவளுடன் அளவளாவிய சம்பவங்கள்யாவும் பசுமரத்தாணிபோல

மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன.

□ □ □

கடந்த கால நினைவுகள் மனதை அலைக்கழிக்க அவளைப் பார்த்தேன். அவளும் அந்தநிலையில்தான்இருந்திருக்கவேண்டும். நெற்றியில் முத்துமுத்தாக வியர்வைத்துளிகள். துடைக்க மறந்தவளாய் நின்றாள்.

"லட்சுமி...!"

கண்கள் கருவண்டுகளாகச் சிறகடிக்க நிமிர்ந்தாள்.

"அப்பிடி ஒருவாழ்க்கை இனி வருமா லட்சுமி?"என்று ஏக்கத்துடன்கேட்டவாறு அவளது கரங்களைப்பற்றினேன்.

அவளது தேகம் ஒரு கணம் சில்லிட்டு நடுங்கியது.

மறுகணம் தன் கைகளை விடுவித்துக்கொண்டு விலகும்போது இரு சொட்டு நீர்த்துளிகள் என் காலடியில் விழுந்து தெறித்தன.

வியர்வையா...கண்ணீரா?

"லட்சுமி...!"

"அதெல்லாம் ஒரு காலமுங்க...அப்ப நாங்கள் சின்னப்பிள்ளையள்... மனசிலை வஞ்சனை கிடையாது..!"

எவ்வளவு அழகாகக் கூறி விட்டாள். அதில்தான் எத்தனை அர்த்தங்கள் ஆழப் புதைந்துள்ளன?!

மனிதனின் வளர்ச்சியில் வஞ்சகமும் கபடமும் வந்து சேர்கிறதோ இல்லையோ சமூகம் அப்படித்தான் நினைக்கிறது.

முகிழ்விடும் மொட்டுக்கள் மலர்ந்து மணம்வீசு முன்பே கருகிப் போனால் அவற்றின் தோற்றம் கூட வெறுமைதானோ?

□□□


## விரைவில்

பூவரசு தருகிறது!

'எம்மெஸ்ஸார்' எழுதும்

**"சமரசத்தில் ஒரு சமாச்சாரம்!"**

திரு கமலநாதன் அவர்கள் எழுதிய
'சைவசமயமும் சர்வமத சமரசமும்'
தொடர்கட்டுரையின் கருத்துக்களை
ஒட்டியும் வெட்டியும்
'எம்மெஸ்ஸார்' எழுதுகிறார்.

# பூவரசு செய்திமடல்

ஆகஸ்ட் '95.

☐ கொழும்பில் பாரியகுண்டுவெடிப்புச் செய்தியுடன் இம்மாத தாயகச்செய்திமடல் ஆரம்பமாகிறது. கொழும்பு சுதந்திரசதுக்கத்துக்கு அண்மையில் மேல்மாகாண முதலமைச்சரின் அலுவலகத்திற்கு அருகில் பாரிய குண்டுவெடித்தது. இதில் 25 பேர் மரணமானதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தம்மை கொலைசெய்வதற்காகவே இந்தக்குண்டு அனுப்பப்பட்டதென ஜனாதிபதி திருமதி சந்திரிகாகுமாரதுங்க தமிழீழவிடுதலைப்புலிகள்மீது குற்றம் சுமத்தினார். கொழும்பில் என்றுமில்லாதவாறு பலத்தபாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

☐ தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என சிறீலங்கா அரசால் சந்தேகிக்கப்பட்ட அமெரிக்கர் ஒருவர் நாடுகடத்தப்பட்டார்.அமெரிக்கமெதடிஸ்ட் மிசனைச்சேர்ந்த கெனத்முல்டர் (வயது26) என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டவராவார்.கிறிஸ்தவதிருச்சபை இந்த நாடுகடத்தலை வன்மையாகக் கண்டித்துள்ளது.

☐ மட்டக்களப்பில் மக்கள்கூடும்சந்தையில் குண்டு ஒன்று வெடித்ததில் 5பேர் பலியானதுடன் 20பேர் காயமடைந்தனர்.கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக சிறிலங்கா இராணுவம் இதைச் செய்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

☐ அடக்குமுறைகளை எதிர்த்து யாழ்நகரில் மிகப்பெரிய பேரணி ஒன்று நடாத்தப்பட்டது. வடபகுதி மீதான பொருளாதாரத்தடை, கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சு, ஷெல்வீச்சு, ஆகியவற்றிற்கு எதிராக இப்பேரணி நடாத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

☐ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சுயாட்சித்திட்டமொன்றை ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ளார்.தெளிவில்லாத இந்தத்திட்டத்தை தமிழீழவிடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.'நாம் சமாதானத்திற்கும் தயார் போருக்கும் தயார்' என அவர்கள் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.
இதே வேளையில் இந்த சுயாட்சித்திட்டத்தை அரசின் முக்கிய அமைச்சர்கள் உட்பட சிங்கள அரசியல்வாதிகள்,பத்திரிகைகள், மக்கள் ஆகியோர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதாக சிறீலங்காவிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

☐ 'ஒப்பரேஷன் டிரக் ஒன் பயர்' என்ற பெயரில் மீண்டும் ஒரு தாக்குதலை சிறீலங்கா இராணுவம் மேற்கொண்டது. பலாலியிலிருந்து சண்டிலிப்பாய்வரை முன்னேறிய இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் அடித்து விரட்டினர். இத்தாக்குதல் காரணமாக 15ஆயிரம் தமிழ் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

□ திருக்கோணமலை நிலாவெளிப் பகுதி பொலிஸ்நிலையம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது. இதில் இருபதிற்கும் மேற்பட்ட பொலிஸார் மரணமானதுடன் பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதேவேளையில் கடலில் இரண்டு கப்பல்கள் புலிகளால் அழிக்கப்பட்டன. 21 கடற்படையினர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

□ அறிவுச்சோலை செஞ்சோலைக்கலைமாலை நிகழ்ச்சி டோட்முண்ட்நகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் போது தமிழீழம் இசைக்குழுவின் கலைஞர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஜெர்மன் கிளையினரால் கௌரவிக்கப்பட்டனர். செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை ஜெர்மன்கிளையினரால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் ஜெர்மன் தமிழ்பண்பாட்டுக்கழகத்தினர் கலைப்படைப்புக்களைப் படைத்திருந்தனர்.கலைப்படைப்புக்கள் அனைத்தும் மக்கள்மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. டோட்முண்ட் நகரைத்தொடர்ந்து ஸ்ருட்காட் நகரிலும் நிகழ்ச்சிகள் நடந்தன. மேலும் செப்டம்பர் மாதம் 30ம் திகதி பீலபெல்ட் நகரில் நடைபெறவுள்ளது. "தளிர் இசைத்தாலாட்டு" "சுதந்திரக்கனல் நடனங்கள்", "விடுதலைவேள்வி" என்ற நாட்டிய நாடகம் ஆகிய கலைப்படைப்புக்கள் இந்நிகழ்ச்சியின்போது கலைப் பூக்களாக மலர்ந்தன.


□ பொஸ்னியாயுத்தம் மேலும்மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐரோப்பிய பாராளுமன்றமும்,ஐ.நா.சபையும் இணைந்து சமாதானத்தைஏற்படுத்த எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.நவீனரக யுத்த ஆயுதங்களினால் மக்கள் கொலைசெய்யப்படுவதுடன் அங்கவீனர்களாகவும்மாறிவருவது சர்வதேச துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்.

□ தமிழ்நாடு வேலூர் 'திப்பு மகால்' சிறப்புக்கைதி முகாமிலிருந்து 43 தமிழீழ விடுதலைப்புலிகள் சுரங்கம் அமைத்துத் தப்பிச்சென்றுள்ளனர். தப்பிச் சென்றவர்களில் சிலர் பொலிஸாரால் மீண்டும்பிடிபட்டபோது 'சயனைட்' அருந்தி தற்கொலை செய்துகொண்டனர். மேலும் சிலர் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

□ தமிழீழத்தை அங்கீகரிக்கக்கோரி ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் தலைமையகத்தைநோக்கி பதினான்காயிரம் தமிழர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடாத்தினார்கள். சுவிஸ்,ஜெர்மனி,பிரான்ஸ்,மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியின் முடிவில் பொதுக் கூட்டமொன்றும் பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெற்றன. மேற்படி தலைமையக முன்றலில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

□ வட இந்தியாவில் டில்லி — கல்கத்தா எக்ஸ்பிரஸ் புகையிரதம் விபத்துக்குள்ளானது. இதில் 300க்கும் மேற்பட்டோர் பலியானதுடன் 200க்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு இலக்காகினர். தமிழ்நாடு நாகபட்டினம் கோடிக்கரை கடற்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற தமிழ்நாடு மீனவர்மீது சிறீலங்கா விமானம் குண்டுத் தாக்குதலை நடாத்தியது. இதில் ஐந்துமீனவர் கொலை செய்யப்பட்டனர்.

— வீ.ஆர்.வீ.



எங்கள்
இளந்தளிர்கள்.

அன்புச் செல்வங்களே!

எங்கள் பூவரசு இனிய தமிழ் ஏடு தனது 5வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் போட்டிகளில் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறது!

## 1. உறுப்பெழுத்துப்போட்டி.

(பத்துவயதுக்கு உட்பட்டவர்கள்மட்டும் கலந்துகொள்ளலாம்)

கீழே பாரதியார் பாடிய புதிய ஆத்திசூடி தரப்பட்டுள்ளது. அதனை உங்கள் கையெழுத்தில் அழகாய் உறுப்பமைய நீங்கள் எழுதி அனுப்ப வேண்டும்.

<u>புதிய ஆத்திசூடி.</u>

அச்சம் தவிர்.
ஆண்மை தவறேல்
இளைத்தல் இகழ்ச்சி.
ஈகை திறன்.
உடலினை உறுதி செய்.
ஊண்மிக விரும்பு.
எண்ணுவது உயர்வு.
ஏறுபோல் நட.
ஐம்பொறி ஆட்சிகொள்.
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஒளடதம் குறை.

## 2. சித்திரம் வரைதல் போட்டி.

**கீழ்ப்பிரிவு (7 வயதுக்குக் கீழ்)**

உங்களில் பலருக்கும் பொம்மைகள் என்றால் மிகவும் பிடிக்கும் இல்லையா? உங்களுக்குப்பிடித்தமான ஒரு பொம்மையை நீங்கள்வரைந்து வர்ணம் தீட்டவேண்டும்.

மேற்பிரிவு (14 வயதுக்குக் கீழ்)

கீழே ஒரு பாடல் தரப்பட்டிருக்கிறது. இந்தப்பாடலில் ஒரு காட்சி வருகிறது.

அந்தக்காட்சியை முழுதுமாய் அல்லது இந்தப்பாடலில் சித்தரிக்கப்படும் காட்சியில் உங்களுக்கு விருப்பமான ஒரு பகுதியை நீங்கள் சித்திரமாக வரையவேண்டும்.

காணிநிலம் வேண்டும் — பராசக்தி
காணிநிலம் வேண்டும் — அங்கு
தூணில் அழகியதாய் — நன்மாடங்கள்
தூயநிறத்தினவாய் — அந்தக்
காணிநிலத்திடையே — ஓர் மாளிகை
கட்டித்தரவேணும் — அங்குக்
கேணியருகினிலே — தென்னைமரக்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு — தென்னைமரம்
பக்கத்திலே வேணும் — நல்ல
முத்துச்சுடர்போல — நிலாவொளி
முன்பு வரவேணும் — அங்கு
கத்துங்குயிலோசை — சற்றேவந்து
காதிற்படவேணும். — என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாயிளந்
தென்றல்வரவேணும்.

## போட்டிகளுக்கான பொது விதிகள்.

1. போட்டிகளில் கலந்துகொள்வோருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வயதெல்லைகள் யாவும் 1995 மார்கழிமாதத்தை இறுதியாகக் கொண்டு கணிக்கப்படும்.

2. போட்டிகளில் கலந்துகொள்வோருக்கான விண்ணப்பப் படிவங்கள் பூவரசுஇதழின் நடுப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.
மேலதிக விண்ணப்பப் படிவங்கள் தேவையானோர் பூவரசு முகவரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

3. பரிசுக்குரிய ஆக்கங்களை பூவரசு நடுவர் குழுவினர் தேர்ந்தெடுப்பார்கள்.

4. பரிசுகள்பெறுவோரின் விபரங்கள் யாவும் கடிதமூலம் அறியத் தரப்படும்.

## போட்டிகளின் முடிவுதிகதி 30.11.1995 ஆகும்.

எக்காரணம் கொண்டும் முடிவுதிகதி நீடிக்கப்படமாட்டாது.



ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி தினத்தை முன்னிட்டு விசேடவழிபாடும் கூட்டுப்பிரார்த்தனையும் 19.08.1995 சனிக்கிழமை மாலை பிறேமன் இந்து வழிபாட்டுச்சங்கத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் சிறப்புற நடாத்தப்பட்டது. பெருந்திரளான அடியார்கள் இப்பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

— ஞானி.

இனிய தமிழ் ஏடு.

# பூவரசு இனிய தமிழ் ஏடு
## 5வது ஆண்டு நிறைவு
## சிறுகதை கவிதை கட்டுரைப் போட்டிகள்.

### விண்ணப்பப்படிவம்.

படைப்பாளரின் பெயர்:-..........................................................

புனைபெயர்:-..........................................................

முகவரி:-..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

ஆக்கம்:- சிறுகதை-கட்டுரை- கவிதை

தலைப்பு:-..........................................................

பூவரசு இனிய தமிழ் ஏடு நடாத்தும் போட்டிக்கென என்னால் அனுப்பப்படும் மேற்படி ஆக்கம் எனது சொந்தப்படைப்பே என்றும் இதுவரை வேறெந்தப் பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ வெளிவராதது என்றும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

..............................

திகதி

..............................

கையொப்பம்.

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

பூவரசு இனிய தமிழ் ஏடு
5வது ஆண்டு நிறைவையொட்டி
எங்கள் இளந்தளிர்களுக்கிடையே நடாத்தும்
***போட்டிகள்!***

<u>விண்ணப்பப் படிவம்.</u>

**கலந்துகொள்ளும் போட்டி:- உறுப்பெழுத்து- சித்திரம்வரைதல்**

**போட்டியில் கலந்துகொள்பவரின் முழுப்பெயர்:-**

..........................................................................................

**பிறந்ததிகதி:-**.......................................................

**முகவரி:-**
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

இவ்விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆக்கம் எனது சுய முயற்சியே என உறுதியளிக்கிறேன்!

...............................................................

(கையொப்பம்)

இவ்விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் சரியானவை என இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

...............................................................

(பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்)

...............................

திகதி

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்பவேண்டிய முகவரி


Poovarasu
Sinniah Maheswaran,
Otto Brenner Allee 56,
28325 Bremen,
Germany.

## நாடினோம் துணையென!

நல்லூர்க் கந்தனை
நலந்தரும் செல்வனை
நாடியோர் மனங்களில்
நடம்புரி ஐயனை

நாளெலாம் துதிப்பவர்
நம்பிக்கை ஒளியினை
நம்மவர் துயர்கெட
நாடினோம் துணையென!

-இந்திரா.



# இரவு என்பது இருட்டல்ல.

~இந்துமகேஷ்.

"சாப்பிடுங்கோவனப்பா!"
"இல்லை... பசிக்கேல்லை!"
"ஏன் பொய்சொல்லுறியள்? என்ரை சமையல் உங்களுக்குப் பிடிக்கேல்லை!"
"நீ இப்ப எங்கை சமைச்சனீ...எல்லாம் நேற்றைக்குச் செய்தது... இண்டைக்கு மிக்ரோவலைக்குள்ளைவைச்சிட்டு எடுத்துத்தாறை!"
"எப்பவுமா இப்பிடிச்செய்யிறன்...இண்டைக்கு வெளிவேலையளாலை நேரமில்லாமப் போச்சுது!...ஒரு நாளைக்கு பழசைச் சாப்பிட்டால் என்னப்பா...? ஊரிலை எத்தினை சனம் சாப்பிட வழியில்லாமல் கஷ்டப்படுகுதுகள்... மற்றவையை ஏன்... நாங்களே இங்கை வரமுந்தி எவ்வளவு கஷ்டப்பட்டம்... அதுகளையெல்லாம் மறந்து போனியளே!"
"சரியப்பா.. இல்லாத காலத்திலைதான் கஷ்டப்பட்டம்...இருக்கிற நேரத்திலையாவது வடிவாய்ச் சமைச்சுச் சாப்பிடலாம்தானை!"
"என்ரை சமையல் எப்பவும் உங்களுக்குப் பிடிக்காது! ஆராவது சமைச்சுப் போட்டாளவையெண்டால் நல்லா அள்ளி விழுங்குவையள்... ஊருலகத்திலை எத்தினை ஆம்பிளையள் வகைவகையாச் சமைச்சு மனிசிமாருக்குக் குடுக்கறாங்கள்... அவளவையெல்லாம் குடுத்து வைச்சவளவை... என்ரை தலையெழுத்து... இப்பிடி உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு உங்களட்டைத் திட்டுவாங்கவேணடியிருக்கு!"
"விஷயம் விளங்காமல் கத்தாதை! ஒவ்வொருத்தனும் தன்தன் மனிசிமாரின்ரை சாப்பாட்டைச் சாப்பிடேலாமல் தாங்களே சமைச்சு அவளவைக்கும் குடுத்துச் சாப்பிடுறாங்கள்... ஆனா என்ரை குஞ்சு சமைச்சால் அது தனியொரு ருசி... எனக்கும் சமைக்கத்தெரிஞ்சிருந்தால் இந்த ருசி எனக்குக் கிடைக்குமே?"
"சமைக்கத்தெரியாட்டிலும்... நல்லாக்கதைப்பியள்!"

"ம்... கதைக்கவும் தெரியாட்டில் கஷ்டம்தான்!

"மிச்சத்தைக் கொட்டாதேங்கோ... இப்பிடி வைச்சிட்டுப் போய்க் கையைக் கழுவுங்கோ...!"

"வேணாம் விடு... இதை இப்பிடியே வைச்சால் நாளைக்கும் இதைத்தான் சூடாக்கித்தருவாய்!"

"ஏனப்பா இப்பிடி மாத்திமாத்திக் கதைக்கிறியள்!"

"மாத்திக் கதைக்கிறனோ...? நானோ?..."

"பின்னை என்ன...? நாங்கள் ரெண்டு சீவனுகள்... ஒரு பிள்ளை குட்டி எண்டு எதுகும் கிடையாது... ஏதோ கடவுள் புண்ணியத்திலை இங்கை கொஞ்சம் நிம்மதியாயிருக்கிறம்... அதிகமாய் இல்லாட்டிலும் கிடைக்கிறதிலைகொஞ்சம் மிச்சம்பிடிச்சு ஊரிலை கஷ்டப்படுகிற எங்கடை ஆக்களுக்கு அனுப்பலாம் எண்டு நீங்கள்தானை சொன்னியள். அதாலைதானை நானும் என்னாலை முடிஞ்சளவுக்குச் சிக்கனமாய் இருக்கிறன்! பேந்தேன் பழசு கிழசு எண்டு புறுபுறுக்கிறியள்...!"

"இதைச்சாப்பிட ஏலாது எண்டா வேணாமெண்கிறன்... எனக்குப் பசிக்கேல்லையப்பா... அதுதான் வேணாமெண்டன்...!"

"சரி சரி... நேரமும் பதினொண்டாச்சு... கையைக்கழுவிப் போட்டுப் போய்ப்படுங்கோ... விடிய வெள்ளண வேலைக்கு எழும்பவேணும்!"

6.

"ஊர்....!"

நினைப்பு வந்ததும்....நெஞ்சை வதைக்கும் சோகமும் கூடவே வந்தது. பிணவாடை வீசும் தெருக்களும், வெறிச்சோடிப் போயிருக்கும் வீடுகளும், வரண்டுகிடக்கும் கிணறுகளும், வாடிப்போன மனிதர்களும், இருண்டு கிடக்கும் கோயில்களும், இரவு பகலாய் ஓயாமல் கேட்கின்ற ஓலங்களும் ஒப்பாரிகளுமாய்....

ஊரா அது? சுடுகாடு!

இந்நேரம் அங்கே போய் எங்கே வாழ்வது? யாருடன் வாழ்வது? ஓடியாடத் தெம்பிருந்தாலாவது ஊர்விட்டுஊர்என்று கால்வழிப்பயணமாவது செய்யலாம். ஆனால் அதையும் இழந்தாயிற்று.

மறுபடியும் ஒரு சுமையாய்... அந்த மண்ணில் போய் இறங்கி...

வேண்டாம்...

அந்த மண்ணுக்கு இப்போது சுமைதாங்கிகள்தான்தேவை! சுமைகள் அல்ல.

"ஊருக்குப் போகவேணும்!" என்ற ஆசையை முளைத்த வேகத்திலேயே கிள்ளி எறிந்தார் ஐயா.

பனிக்காலம் விடைபெறத்தொடங்கியிருந்தது.

குளிர்காற்று இடையிடையே வீசியபடிதானும் ...

இருந்தது.
ஒரு வருத்தமும் உள்ளே கிடையாது என்று வைத்தியர்கள் உறுதிப்படுத்தி வெளியே அனுப்பியதில் சுப்பையர் கொஞ்சம் உற்சாகமாக இருந்தார்.
ஆனாலும் வைத்தியசாலைக்குப்போய்வந்த பிறகு அவரது மனோநிலையிலும் கொஞ்சம் மாற்றம் ஏற்பட்டிருந்தது.
இத்தனைகால அகதிவாழ்க்கையில் அவர் தன்னை ஒரு அகதியாய் நினைத்துக் கொள்ளாமலேதான் வாழ்ந்திருந்தார். இப்போது உணர்கிறார்.
"ஒரு அகதியாகவே என்வாழ்க்கையை நான் முடித்துவிடப் போகிறேனா? யாருமற்ற அனாதையைப்போல என் பிணம் அடக்கம் செய்யப்பட்டுவிடுமா? பிள்ளை குட்டிகளைப்பெற்றும் உற்றம் சுற்றம் என்று இருந்தும் எதுவுமே நிலைபெறாத ஒரு வாழ்க்கையின் முடிவுக்கா நான் போய்க் கொண்டிருக்கிறேன்? எப்போதோ ஒரு சின்னப்பராயத்தில் எட்டாமல் போய்விட்ட ஒரு உறவுக்காக உள்ளூர ஏங்கும் மனம் இப்போதுள்ள உறவுகளோடு மட்டும் ஒட்டிக்கொள்ள மறுப்பது ஏன்? இது தானாக ஏற்பட்ட மாற்றமா? அல்லது நானாக உருவாக்கிக்கொண்ட மாற்றமா? ஊரில் வாழ்ந்தவரையில் ஒரு ராஜாவைப்போல் என்னால் வாழ முடிந்திருக்கிறது. அங்கே என்னைச்சுற்றி உறவுகள் நிறையவே இருந்தன... இங்கே உறவுகள் என்னைத் தேடிவரவுமில்லை. நான் உறவுகளைத் தேடிப்போகவுமில்லை!"
"தேவைகளை ஒட்டியதுதான் உறவுகளும்!" என்ற ஞானம் சுப்பையருக்கு இப்போது புரிந்தது.
இத்தனை நாட்களாக எனக்கும் தேவைகள் இருந்ததில்லை...
இப்போது தேவைகளை உணரும் இந்தக்கணத்தில் உறவுகளின் அருமை தெரிகிறது...
தன்னைப்பெற்ற தாயிலிருந்து தான்பெற்ற பிள்ளைவரை தேவைகளை ஒட்டிய உறவுகள்தான் உலகத்தில் நிலைபெற்றிருக்கின்றன.
இந்த உலகத்திலிருந்து ஒருவன் விடைபெற்றுப் போகும்போது அவனைச் சூழ்ந்திருக்கும் உறவுகளை வைத்துத்தான் அவன் வாழ்ந்த வாழ்க்கையை உலகம் கணக்கில் எடுத்துக்கொள்கிறது.
நானும் வாழ்ந்து முடிக்கப்போகிறேன்....
இந்த முடிவில் எனக்கு இந்த உலகம் தரப்போகும் பெறுமதி?

சுப்பையர் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.
அவரது குடியிருப்புக்குவெளியே தெருவை ஒட்டினாற்போல் அமைந்திருந்த சிறுவர் பூங்காவின் வாங்கொன்றின் மீது அவர் உட்கார்ந்திருந்தார்.
அயலிலுள்ள ஜெர்மனியக்குழந்தைகள் சில தம்பாட்டுக்கு ஏதோ விளையாடிக் கொண்டிருந்தர்கள். பூங்கா கலகலப்பாக இருந்தது.
அவர்கள் யாரும் இவரைப்பற்றி அக்கறைப்பட்டதாகத்தெரியவில்லை.
இவர் இந்த வீட்டுக்குக் குடிவந்தபுதிதில் இவரை விழித்துவிழித்துப்பார்த்த குழந்தைகள் இப்போது சற்றுப் பெரியவர்களாகியிருந்தார்கள். கருத்த தலைமயிரும் கருத்தவிழிகளும் இப்போது அவர்களுக்கு ஆச்சரியம் தருவனவாக இல்லை.
பழக்கப்பட்டுவிட்டார்கள்.
மூடியிருந்தகருமேகங்களை மெள்ள விலத்தியபடி மாலைவெய்யில் வாங்கின் மீதும் வந்து விழுந்தது.

ஆகாயத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினார்.
ஊரில் எறிக்கும் மாலைச் சூரியனின் கொள்ளை அழகு மனதில் படம் போட்டது. அதே சூரியன்தான் இங்கேயும். ஊர் மாறும் மனிதரைப்போல் இதுவும் தன்கோலங்களை மாற்றிக்கொள்கிறது என்று நினைத்துக் கொண்டார்.
எதிர்வீட்டுக்கிழவி கிளவுடியா தன் பேரக்குழந்தையைத் தேடிவந்தவள் இவரைக் கண்டதும் மாலைவணக்கம் சொல்லிப் புன்னகைகாட்டினாள்.
நலம் விசாரித்துக்கொண்டாள்.
இவரும் பதிலுக்குக் கேட்டுக்கொண்டார்.
அதிகமாய் நின்று இவருடன்கதைக்காமல் அவள் தன் பேரக்குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் மறைந்தாள்.
"இவள் கிளடியா!" என்று தனக்குள் சொல்லிக்கொண்ட சுப்பையா அவளது பேரில் ஒரு பகிடியைத் தானே கற்பனைசெய்துகொண்டு தனியாகச் சிரித்தார்.
ஒருசில வெறுப்புக்காட்டும் பெண்களைப்போல் இல்லாமல் கிளவுடியா சாந்தமான பெண்ணாக இருந்தாள். எப்போதும் இயல்பான புன்னகை தவழும் முகம். வயது ஐம்பதுக்கும் அறுபதுக்கும்இடையில் இருக்கலாம். உழைப்பினால் வலுவேறிப்போன உடம்பு என்றாலும் பெண்மைக்கேயுரிய லட்சணங்கள்மாறாமல் இருந்தது. முகத்தில் கண்களுக்கருகே கொஞ்சம் சுருக்கம் விழுந்திருந்தாலும் அதை மைப்பூச்சினால் அழகாக மறைத்திருந்தாள். புதிதாக அவளைச் சந்திப்பவர்கள் முப்பது வயதுக்கு மேல் அவளைமதிக்க மாட்டார்கள்.
இளம்பெண்களைவிட கிழவிகள்தான் அதிகமாகத் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். அதனால்தானோ என்னவோ குமரிகளைவிடக் கிழவிகளும் நல்ல அழகாகத் தெரிகிறார்கள்.
சின்னவயதில் கிளவுடியா மிகவும் அழகாக இருந்திருப்பாள் என்று நினைத்தார் சுப்பையா.
அழகைப்பற்றி இப்போது நான் ஏன் நினைக்கிறேன்? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டவர் மறுபடியும் தனக்குள் சிரித்துக்கொண்டார்.
மனதுக்குத் தடையேது?
நினைத்தபக்கமெல்லாம் அது தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கும். அதை ஒரு வழிக்குக்கொண்டுவந்து வரம்புகட்டிவைத்தால் எல்லாம்சரியாகிவிடும்.

ஐயா தியானத்தில் ஆழ்ந்தாற்போல் சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டு வாங்கில் சாய்ந்து கொண்டார்.
தடாரென்ற சத்தத்துடன் ஏதோ ஒரு பொருள் அவரது வாங்கின்மீது வந்து மோதியதில் திடுக்கிட்டுக் கண்விழித்தவரின் எதிரே நாலைந்து ஜெர்மன் இளைஞர்கள் தங்களுக்குள் ஏதோ சொல்லிச் சிரித்தபடி நின்றிருந்தார்கள்.
சுப்பையாவுக்குள் உறங்கிக்கிடந்த 'ஆமிக்காரன்' பழையவயசின் வேகத்தோடு அவருக்குள் சிலிர்த்துக்கொண்டான்.
"சேட்டையா விடுறீங்கள்?"

(தொடரும்)

# நமது கலைஞர்.

விழா மண்டபம்...
கலை நிகழ்ச்சிகளைக்கண்டு
களிக்கவெனத் திரண்டிருக்கும் இரசிகர்
கூட்டம்.
நிகழ்ச்சிகள் தொடங்கும் நேரம்....
'வணக்கம் இரசிகப்பெருமக்களே!'
என்று விளித்து மேடையின்பக்கம்
இரசிகர்களை ஈர்க்கும்
ஒரு கணீர்க்குரல்!
முகத்தைப்பார்க்காமலேயே
அறிவிப்பாளர் யாரென்பதை இரசிகர்கள்
தெரிந்துகொள்கிறார்கள்!
'ஓ...எங்கள்...வலன்ரைன்!'
குறிப்பிட்ட கால எல்லைக்குள்ளேயே
பல்லாயிரக்கணக்கான உள்ளங்களைத்
தன் இனியகுரலால்
வசப்படுத்தியிருக்கும்
வலன்ரைன் அவர்களை பூவரசு
தன்வாசகர்களுக்காகச் சந்திக்கிறது....



அறிவிப்பாளராக....



நடிகராக....

'அறிவிப்பாளர்'
வலன்ரைன்

☐ *அறிவிப்பாளராக நிகழ்ச்சித்தொகுப்பாளராக தாங்கள் கலந்துகொண்ட முதல் மேடை எது? அதற்குரிய ஆர்வம் எப்படி ஏற்பட்டது?*

☐ 1988ம் ஆண்டு தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் ஜேர்மன்பூராவும் நடாத்திய ஒளிவிழா நிகழ்ச்சி மேடை எனது முதல்மேடையாக அமைந்தது. மேடைநிகழ்ச்சி என்றமுறையில் இதை எனது முதல்மேடை என்று குறிப்பிட்டாலும் ஈழத்தில் எறிபந்தாட்டப் போட்டிகளிலும் மெய்வல்லுனர் போட்டிகளிலும் விவரணம் (Commantary) வழங்கியிருக்கிறேன்.

ஆர்வம் என்பதை விளக்கமாகச்சொல்லப்போனால் ஆண்டவன் தந்த குரல், அன்னை பாலோடு ஊட்டிய தமிழ், அத்தோடு நான் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றபோது அழகுதமிழை அள்ளி அள்ளி அன்போடும் கண்டிப்போடும் போதித்த மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு பேரின்பநாயகம் அவர்கள். அவர் இன்று இவ்வுலகில் இல்லையென்றாலும் அவர் எனக்குப்போதித்த தமிழ் மூலம் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது. சிறிய வயதிலிருந்து இயல் இசை நாடகங்களில் ஒரு ஈர்ப்பு இருந்தது. பாடல் என்றால் பாடிப்பார்ப்பேன். வானொலியில் அறிவிப்புச் செய்தால் அவர்களைப் போன்று செய்துபார்ப்பேன். நாடகத்தைப் பார்த்துவிட்டு வந்த மறுநாள் பிடித்த நடிகரைப்போல் நடித்துப்பார்ப்பேன். சிறு வயது தொடக்கம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற தமிழ் ஆங்கில நாடகங்களில் நடித்திருக்கிறேன். சிறிய வயதிலிருந்து பாடகராக வரவேண்டுமென்பது எனது ஆசை. ஆசைப்படுவதெல்லாம் கிடைக்குமா என்ன? கற்பதற்கு ஆசைகள் இருந்தாலும் அதற்கு எல்லாப் பெற்றோர்களும் ஒத்துழைப்பார்களா என்ன? பிள்ளைகளிடம் உள்ள திறமைகளைக்கண்டறிந்து அதற்கு வழி அமைக்கின்ற பெற்றோர்களைவிடத் தாம்நினைத்ததை நாம்செய்யவேண்டுமென்று நினைக்கின்ற பெற்றோர்கள்தானே அதிகம். எனக்குள் ஒரு கலைஞன் இருக்கிறான் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும். அதனால் பெரிய அளவில் வெளிக்கொணர்கின்ற சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. அறிவிப்பாளராக வரவேண்டுமென்கிற ஆர்வம் எனக்கிருந்ததில்லை. ஆண்டவன் தந்த குரலும் கற்ற தமிழும் ஒரு விபத்துப்போல் என்னை அறிவிப்பாளராக ஆக்கியிருக்கிறதென்று சொல்லாம். தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்து நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராகக் கடமையாற்றியபின் 1989ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஜேர்மன்கிளையினர் தமிழீழ விடுதலைப்புலிகள் கரங்களைப் பலமாக்க புரட்சி இசைவிழா நிகழ்ச்சியைத் தயார்படுத்திக் கொண்டிருந்தவேளை அறிவிப்பாளர் ஒருவரைத் தேடினார்கள். அந்தவேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஜேர்மன்கிளையின் பொறுப்பாளர்கள், கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்கள் என்னை அறிவிப்பாளராகத் தேர்வுசெய்ய அழைத்திருந்தார்கள். நான் அங்குசென்று பல பாணிகளில் அறிவிப்புச் செய்து காண்பித்தேன். நான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதியாகச் செயற்பட்டுவந்ததாலும் இலட்சிய நோக்கம் எமது விடுதலையில் கொண்டிருந்ததாலும் முக்கியமாக எனது குரலை ஏற்றுக்கொண்ட காரணத்தாலும் என்னை அவர்கள் தம்மோடு இணைத்துக் கொண்டார்கள்.

அதனால் புலிகளின்புரட்சி இசைவிழாவில் அறிவிப்பாளராகக் கடமையாற்றினேன். அந்தவேளையில் பலர் எனக்கு உந்துசக்தியாகத் துணைபுரிந்தார்கள் என்பதை இவ்வேளையில் நான் குறிப்பிட்டாகவேண்டும். அன்றுதொட்டு எனதுகுரலை எமது விடுதலைக்காக இலட்சியநோக்கத்தோடு எனக்கென்றோர் கட்டுப்பாட்டை விதித்து எனதினிய மக்களுக்காக அர்ப்பணித்துக் கடமையாற்றுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

☐ *தங்கள் இனிய குரல்வளத்தால் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்து கொண்டவர்தாங்கள். இத்துறையில் ஏற்கனவே பிரபலமானஅறிவிப்பாளர்களின் பாணி எதையாவது நீங்கள் பின்பற்றுகிறீர்களா? இத்துறையில் தங்களைக் கவர்ந்துகொண்ட அறிவிப்பாளர்கள் என்று நீங்கள் யாரைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?*

குழந்தைள் தவழ்கின்றது,நடக்கின்றது. அதற்காக ஒரு குழந்தையைப் பார்த்துத்தான் இன்னொரு குழந்தை நடக்கின்றது என்று கூறமுடியுமா? பாடகராக,நடனக்கலைஞராக,நடிகராகவருவதற்குக் கற்றுக்கொள்ளபாடசாலைகள், கல்லூரிகள் உண்டு. ஆனால் அறிவிப்பாளராவதற்கு எமது நாட்டில் பாடசாலைகளோ கல்லூரிகளோ இருப்பதாக நான் அறியவில்லை. குரல்வளமும் தாய்மொழி அறிவும் தனது முயற்சியுடன் கூடிய திறமையும் இருந்தால்தான் அறிவிப்பாளராகமுடியும் என்பது எனது தாழ்மையான கருத்து. நூற்றுக்கு நூறுவீதம் யாரையும் பின்பற்றவில்லை என்று பொய்சொன்னால் கேட்கின்ற மக்களுக்குப் புரியாதா என்ன? என்னைக் கவர்ந்து கொண்ட அறிவிப்பாளர் அன்று தொட்டு இன்றுவரை தமிழுலகமே பாராட்டுகின்ற இலங்கை வானொலி அறிவிப்பாளர் கலைஞானிதன் பி.எச். அப்துல்ஹமீட் அவர்கள்தான். அதனால் தானோ என்னவோ எனதுகுரலில் அவரது சாயல் இருப்பதாகப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

☐ *அறிவிப்பாளர்களாகக் கடமையாற்றும் ஒரு சிலர் பெரும்பாலும் வானொலி அறிவிப்பாளர்களின் பாணியையே பின்பற்றுவதாகத் தோன்றுகிறது.இதுபற்றித் தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

வானொலி அறிவிப்பாளர் மேடையில் அறிவிப்பாளராகக் கடமையாற்றும் போது தான் வானொலி அறிவிப்பாளர் என்பதையும், மேடையில் அறிவிப்பாளராகக் கடமையாற்றும்போது தான் மேடைஅறிவிப்பாளர் என்பதையும் மறந்துவிட வேண்டும். இரண்டும் வேறுபாணியையுடையது. மேடையில்செய்யும் பாணியை வானொலியிலும் வானொலியில்செய்யும் பாணியை மேடையிலும் செய்யமுடியாது. அதற்காக வானொலி அறிவிப்பாளர் மேடையிலும் மேடை அறிவிப்பாளர் வானொலியிலும் செய்ய முடியாதென்றும் சொல்ல முடியாது. பிரபல்ய வானொலி அறிவிப்பாளர்கள் மேடையில் அறிவிப்பாளர்களாக மிளிர்ந்திருக்கிறார்கள்தானே! பிரபல்ய அறிவிப்பாளர்களது பாதிப்பு உண்டென்பதை மறுக்கமுடியாது.ஆனால் அவர்களது பாணியைப் பின்பற்றுவது தவறுதானே!

☐ *எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் அறிவிப்பாளரின் பங்கு மிகமுக்கியமானது. ஒரு அறிவிப்பாளராகக் கடமையாற்றுவதில் உள்ள சந்தோஷங்களையும் சங்கடங்களையும்பற்றி வாசகர்களுக்குக் கொஞ்சம் சொல்லுங்களேன்?*

உங்களது இந்தக் கேள்வியையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் அறிவிப்பு ஒரு நிகழ்ச்சிக்கு முக்கியமானது என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை.விற்கின்ற பொருள் சிறப்பாக இருந்தாலும் விளம்பரம் இல்லாவிட்டால் விற்க முடியாது இது உண்மை. நிகழ்ச்சியும் நிகழ்ச்சியை அலங்கரிக்கின்ற கலைஞர்களும் ஒரு பானம். அதை ஊற்றிக் கொடுக்கின்ற கிண்ணம்தான் அறிவிப்பு என்று தமிழர் கலைபண்பாட்டுக்கழக ஜேர்மன் கிளையின் பொறுப்பாளர் எனது 100வது மேடையிலே கூறியதை இந்த இடத்தில் நான் சொல்லலாம். ஒரு மேடையை அலங்கரிக்கின்ற கலைஞரையும் அவர் வழங்கும் கலையையும் விபரமாக விளக்கி மக்களுக்கு அதாவது ரசிகர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தால்தான் மக்கள் சிந்தாமல் சிதறாமல் பருகுவார்கள். அப்படி அறிவிக்காது போனால் ஓட்டைச்சிரட்டையில் ஊற்றிய நீர்போலாகிவிடும். அடுத்து ஒரு அறிவிப்பாளரைப்பற்றியும் அவரது முக்கியத்துவத்தைப்பற்றியும் சொல்வதானால் ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஆகக்குறைந்தது ஐந்துநாட்களுக்கு முன் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அறிவிப்பாளருடன் கலந்துரையாடி நிகழ்ச்சிகளை நிரல்படுத்த வேண்டும். அத்தோடு அன்று நடைபெற இருக்கின்ற சகல நிகழ்வுகளையும் தெரியப்படுத்தவேண்டும். ஐந்து ஆறு நாட்களுக்கு முன் அமைப்பாளர்கள் விபரங்களைத் தந்தால் கலைஞர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் தயாரித்துக் கொள்ளவும் இலகுவாக இருக்கும். நிகழ்ச்சி அமைப்பாளர்களிலும் பார்க்க அறிவிப்பாளர்கள்தான் மக்களின் விருப்பங்களைத் தெரிந்தவர்கள். நிகழ்ச்சி தொடங்கி முடியும்வரை மக்களின் கவனம் வேறுபக்கம் திரும்பாது வைத்திருக்கவேண்டியதும் அறிவிப்பாளரது கடமையே. தொடர்ந்து நடனத்தையோ பாட்டையோ மக்கள் பார்க்கவிரும்புவதில்லை. மக்கள் கவனம் வேறு திசைக்குச் சென்றுவிட்டால் அவர்களை மேடையின்பக்கம் திருப்புவது மிகவும் கடினம். நிகழ்ச்சிக்கு அறிவிப்பு முக்கியம் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்.அதனால் இன்னுமொன்றையும் நான் இங்கு கூற விரும்புகின்றேன். ஒரு நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதும் முடித்து வைப்பதும் மக்களைத் திசைதிரும்பாது வைத்திருப்பதும் இடையில் வரும் சங்கடங்களைத் தீர்த்துவைப்பதுமாக இன்னும் பலவழிகளில் ஒரு அறிவிப்பாளரது பங்கு பெரும்பங்காக அமைகின்றது. பெரும்பாலும் இங்கு வெளியாகும் பத்திரிகைகள்சரி சஞ்சிகைகள்சரி அறிவிப்பாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அறிவிப்பும் ஒருகலைதான் என்பதை இவர்கள்உணரவேண்டும். இந்நிகழ்ச்சியை இந்த அறிவிப்பாளர்தான் தொகுத்து வழங்கினார் என்றுகூட எழுதுவதில்லை. பத்திரிகைகளது குற்றமா அல்லது பத்திரிகை ஆசிரியர்களது குற்றமா என்பது தெரியவில்லை. இந்த நிகழ்ச்சியை யார் தொகுத்து வழங்கினார் என்பதை நிகழ்ச்சிக்குப் போனவர்களிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். சிலவேளைகளில் ஒரு நாடகத்தில் 4 நடிகர்கள் நடித்தால் இருவரின்பெயர்தான்வெளியாகியிருக்கும். பத்திரிகைகளுக்கு கலைஞர்கள்மேல் பாகுபாடு இருக்க முடியாது. ஆகவே இதுவிடயத்தில் பத்திரிகைகள் சஞ்சிகைகள் கவனம் செலுத்தவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பானத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் ஊற்றிப் பருகிய கிண்ணத்தைத்தூக்கி மூலையில்போடுவதுநியாயமா? அறிவிப்பாளராகக் கடமையாற்றுவதில் சந்தோஷங்களைவிட சங்கடங்கள்தான் அதிகம். சந்தோஷங்கள் என்று சொல்லப்போனால் நாங்கள்எதிர்பார்ப்பதைவிட கலைஞர்கள்

மேடையைச் சிறப்பித்து ரசிகர்களும் அக்கலைஞர்களை வாழ்த்தினால் கலைஞர்களுக்கும் சந்தோஷம். எமக்கும்சந்தோஷம்.மேலும் நிகழ்ச்சி ஏற்கனவே தொகுத்தபடி நடைபெற்று மக்கள் திசைதிரும்பாது கண்டுகளித்துவிட்டால் அதைவிடச் சந்தோஷம் வேறில்லை. ஒரு மேடையை எந்தப்பெரிய கலைஞன் அலங்கரித்தாலும் அரங்கத்திலுள்ள ரசிகர்கள் ரசிக்காவிட்டால் கலைஞர் பாடும் சங்கடம்தான். எம்பாடும் சங்கடம்தான். அடுத்து நாம் விடிய விடிய நிகழ்ச்சியை நிரல்படுத்தினாலும் ஒரு கலைஞர் தாமதமாக வந்தால் கூட அன்றைய நிகழ்ச்சி பெரியளவில் பாதிப்படைந்துவிடும். ஐந்து மணிக்கு நிகழ்ச்சி என்று நாம் கூறினால் ஆறுமணிக்கு மக்கள்வருவது வழக்கமாகிவிட்டது. அதனால் நிகழ்ச்சிமுடிவதற்கும் தாமதமாகிறது.மண்டப உரிமையாளர்களிடம் கெஞ்சுகின்ற நிலைமைகளும் ஏற்படுவதுண்டு. இதற்குக் காரணம் மக்கள் என்று சொன்னாலும் ஆராய்ந்து பார்த்தால் காரணம் கலைஞர்கள்தான் என்பது தெளிவாகிவிடும். ஒரு கலைஞன் தாமதமாக வந்தால் சில வேளைகளில் ஒரு மணித்தியாலம் பிந்தி ஆரம்பிக்கவேண்டிய நிலைமை ஏற்படுவதுமுண்டு. தொடர்ந்து ஐந்துமணிக்கு ஆரம்பிக்க வேண்டிய நிகழ்ச்சி ஆறு மணிக்கு ஆரம்பிப்பதால் மக்களும் பழகிவிடுவார்கள். பழக்கப்பட்டுவிடுவார்கள். கலைஞர்களையும் மக்களையும் விடுங்கள். சிலசந்தர்ப்பங்களில் பிரதம அதிதிகளே பிந்தி வருவதுண்டு. பிரதம அதிதிகளாக வருகின்ற ஜேர்மன் நாட்டுப் பிரஜைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. மாற்றானைத்திருத்தமுன் எமது கலைஞர்களும் மக்களும் இதை உணர்ந்துகொள்ளவேண்டும்.ஒரு கலைஞனின் தாமதத்தால் 500 ரசிகர்கள் அரங்கத்தில் காத்து இருப்பதும் 50 ரசிகர்களுடன் நிகழ்ச்சியை ஆரம்பிக்கின்ற நிலையையும் மாற்றவேண்டும். வெகுவிரைவில் இந்நிலை மாறவேண்டும்.

☐ *இதுகாலவரையில் எவ்வகையான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறீர்கள்? எந்த நிகழ்ச்சியாவது உங்களுக்கு ஒரு அறிவிப்பாளர் என்ற வகையில் மிக மகிழ்ச்சியை அளித்திருக்கக்கூடும். எந்த நிகழ்ச்சி?*

1988 ம் ஆண்டு தொடக்கம் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகம் நடாத்திய ஒளிவிழா, அகதிகளுக்கு உதவிடும் நிகழ்ச்சிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஜேர்மன்கிளை நடாத்திய நிகழ்ச்சிகளில், மாவீரர்நாள் நிகழ்ச்சிகளில், தமிழர் புனர்வாழ்வுக்கழக இரங்கும் இன்னிசை இரவு, புனர்வாழ்வுக்கலைத்தென்றல்நிகழ்ச்சிகளில்,உலகத்தமிழர் இயக்கக்கல்விப்பணியின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில், பொங்கல் விழாக்களில், உலகத்தமிழர் இயக்க தமிழாலயங்களது ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில், தமிழ் மாணவர் அமைப்பினது நிகழ்ச்சிகளில், செஞ்சோலைநிகழ்ச்சிகளில், விடுதலைநோக்கும் இலட்சியப்பற்றும் கொண்ட நர்த்தகிகளது அரங்கேற்ற வைபவங்களிலுமாக 110 மேடை நிகழ்ச்சிகளில் பணிபுரிந்திருக்கிறேன். மகிழ்ச்சியூட்டிய நிகழ்ச்சிகள் ஏராளம் குறிப்பாகச்சொல்லப்போனால் 1994ம் ஆண்டு முஞ்சன் (München) நகரத்தில் நடைபெற்ற இரங்கும்இன்னிசை இரவு நிகழ்ச்சியைச் சொல்லலாம். ஏனென்றால் மேடையில் பேசிய சிறுவர்கள் தொடக்கம் மாபெரும் கலைஞர்கள்வரை அந்த அரங்கத்திலிருந்த மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவிலும் மண்டபம் நிறைந்த கரகோசத்தை வழங்கி உற்சாகப்படுத்திய தன்மை கலைஞர்களை சமமாக மதித்ததன்மை நாங்கள் கூறியதை ஏற்றுப்புரிந்து கொண்ட தன்மை என்பன மிகமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கலைஞர்கள் வளர ரசிகர்கள்

வழங்கவேண்டியது கரகோசமும் அவர்களை மதிக்கின்ற தன்மையும் தான் என்பதை நான் கூறத்தேவையில்லை.

☐ *அறிவிப்பாளர்கள் சில சந்தர்ப்பங்களில் சில இக்கட்டுக்களில் மாட்டிக் கொள்கிறார்கள். உதாரணமாக ஒரு சிலரை அவர்களது தகுதிக்குமீறியே புகழ்ந்துதள்ளவேண்டிய கட்டாயம். இப்படியான சூழ்நிலைவரும்போது எப்படிச் சமாளிப்பீர்கள்?. (உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒருவர் பாராட்டப்படும்போது அதேவரிசையில் பாராட்டுக்கு உரியவரல்லாத ஒருவரையும் நீங்கள் பாராட்ட வேண்டியிருக்கிறது. இப்படியான சந்தர்ப்பத்தில் நீங்கள் இருவரையும் சம அளவிலே ஒப்பீடுசெய்து வார்த்தைகளைப் புனைவீர்களா? அல்லது அவரவரது தகுதிக்கேற்பவே வார்த்தைகளைப் பயன்படுத்துவீர்களா?)*

புகழ் என்பது தானகவே கிடைப்பதொன்று. தானாகவே கிடைத்தால் கெளரவம். கேட்டுப்பெற்றால்...?. அதை என்னவென்று நான் சொல்ல! பொதுவாக நான் அறிவிப்பாளராகக்கடமையாற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள் அனைவரும் விடுதலையை நேசிப்பவர்கள்.பல கஷ்டங்களைச் சுமப்பவர்கள். பலர் புகழ் பூத்த கலைஞர்கள். நான் யாரையும் அவர்களது திறமையைமீறிப் புகழ்ந்ததேயில்லை. அவர்களது திறமையை வைத்துத்தான் புனைந்துகொள்வேன். ஒரு கலைஞன் எங்களது மேடையை அலங்கரிக்கிறார் என்றால் அவரது அனுபவம் திறமை எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தபின்புதான் அவரைப்பற்றிக் கூறுவதுண்டு. ஒருவரைத் தகுதிக்குமீறிப் புகழவேண்டிய சந்தர்ப்பம் இதுவரை வந்ததில்லை. அப்படி வந்தாலும் புகழமாட்டேன்.

☐ *ரசிகர்களைச் சமாளிக்க முடியாத நிர்ப்பந்தங்கள் எப்போதாவது உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? அந்த நிலைமையை எப்படிச்சமாளித்தீர்கள்?*

ரசிகர்கள் அன்பானவர்கள். பல மாறுபட்ட ரசிப்புத்தன்மை உடையவர்கள். படு பயங்கரமானவர்கள். குறும்புத்தனமுடையவர்கள்.அவர்களைச் சமாளிக்கமுடியாத நிர்ப்பந்தங்கள்வரவில்லை என்று சொல்ல முடியாது.வந்தபோது எப்படிச் சமாளித்துக்கொண்டேன் என்பதைக் கூறிவிட்டால் பிறகு சமாளிக்க முடியாது இல்லையா?

☐ *நீங்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட சுவையான சம்பவங்கள் அல்லது உங்களால் மறக்கமுடியாத சம்பவங்கள் என்று எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?*

ஒவ்வொரு மேடையிலும் நிச்சயம் ஏதாவது சுவையான சம்பவம் நடக்கும்.ஆனால் சிலசந்தர்ப்பங்களில் அச் சுவையைப்பகிர முடியாது. தனித்துச் சுவைக்கவேண்டிய நிலையும் ஏற்படும். மறக்கமுடியாத சம்பவங்கள் ஏராளம் உண்டு. ஆனால் நெஞ்சில் இன்றும் நிறைந்துள்ளதைச்சொல்கிறேன். ஈழமக்களுக்காவே தனதுகுரலை அர்ப்பணித்துப் பாடிவருகின்ற தமிழகக் கலைஞர் கலைமாமணி தேனிசை செல்லப்பா அவர்கள் ஈழத்துக்குச்சென்று அங்கு நிகழ்ச்சிகளை நடாத்தியபோது மழையில் நனைந்துகொண்டு லட்சக் கணக்கான மக்கள் அவரது நிகழ்ச்சியை உணர்ச்சிமிக்க பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.நமது தேசியத்தலைவரின் பாராட்டுக்களோடு தமிழீழ விடுதலைப்

புலிகளின் இலட்சனை பொறிக்கப்பட்ட பதக்கத்தையும் பெற்றுக் கொண்டவர் அந்த மாபெரும் கலைஞர். அவரோடு ஒரே மேடையில் இங்கு கடமையாற்றியதையும் அந்தக் கலைஞரது வாழ்த்துக்களைப் பெற்றதையும் மறக்க முடியாது. அடுத்து எனது 100வது மேடை முன்ஸ்ரர் (Münster) நகரத்தில் புனர்வாழ்வுக்கலைத்தென்றல் நிகழ்ச்சியில் இடம்பெற்றது. அப்போது நான் மேடையில் அறிவிப்புச்செய்து கொண்டிருந்தபோது திடீரென எனது தோளில்தட்டி ஒலிவாங்கியை வாங்கிவிட்டு மலர்ச்செண்டுவழங்கி என்னையும் ஒரு கலைஞனாக நமது தமிழர் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அண்ணன் கா.சிவநாதன் அவர்கள்வாழ்த்திப்பேசி ஆரத்தழுவிக்கொண்டதையும் மறந்துவிட முடியாது. இதுவரை 110 நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராகக் கடமையாற்றியிருக்கிறேன் என்றால் எத்தனைகலைஞர்களைச் சந்தித்திருப்பேன். சிலகலைஞர்கள் மறக்கமுடியாதவர்களாக நெஞ்சத்தில் இடம்பிடித்துவிடுவார்கள்.

*□ தாங்கள் சிறந்த ஒரு நடிகராகவும் மேடைகளில் ஒளிர்வதை பூவரசு வாசகர்கள் அறிவார்கள். நடிப்புத்துறையில் உங்கள் அனுபவங்களைச் சொல்லுங்கள்.?*

நான் ஒரு நடிகன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சிறந்த நடிகன் என்பதை மக்கள்தான் சொல்லவேண்டும். ஒரு நடிகன் எப்போதும் தான் வளர்ந்துவருகின்ற நடிகன் என்பதைமட்டும் மனதில் வைத்துக்கொண்டால் அவன் எப்போதும் சிறந்த நடிகன்தான். நான் சிறந்த நடிகன் என்று ஒருவன் நினைத்துவிட்டால் அவன் என்றுமே சிறந்த நடிகனாக இருக்கமுடியாது. இந்தவகையில் நான் வளர்ந்துவருகின்ற நடிகன். சிறுவயதிலிருந்தே தமிழ் ஆங்கில நாடகங்களில் நடித்திருக்கிறேன்.பல நாடகங்கள் நாட்டுக்கூத்துக்களைப் பார்த்திருக்கிறேன்.நடிப்பு என்று வரும்போது ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்துக்கு ஏற்ப நடிகன் மாறவேண்டும். நடிக்கின்ற பாத்திரத்தைப் புரியாவிட்டால் யாருமே அப் பாத்திரமாக மாறமுடியாது. கமக்காரனையே காணாதவர் கமக்காரனாக எப்படி நடிக்கமுடியும்?முடியாது! கமக்காரன் இப்படித்தான் இருப்பான். அப்படி நடி என்று ஒருவர் சொல்வதைக் கேட்டும் நடிக்கமுடியாது. ஒரு நாடகம் எவ்வளவு சிறந்த அம்சங்களை உள்ளடக்கி இருந்தாலும் அதில் பங்கேற்று நடிக்கும் கலைஞர்கள் சிறப்பாக நடிக்காதுவிட்டால் அந்த நாடகம் வெற்றியடையப் போவதில்லை.சோகநாடகத்தின்மூலம் மக்களை அழவைப்பதும், நகைச்சுவை நாடகத்தின்மூலம் மக்களைச்சிரிக்கவைப்பதும் நடிகனின் திறமையில்தான் தங்கியுள்ளது.கடந்த வருடம் வூப்பெற்றால் நகரத்தில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்ச்சிகளுக்காக நான் "ஒளி தந்த மாற்றம்" என்னும் ஒரு நாடகத்தை எழுதினேன். அந்த நாடகத்தில் ஒற்றைக்கால் இல்லாதவராக வரும் ஒரு பாத்திரம். எழுதும்போது கற்பனையில் சுகமாக இருந்தது. நடிக்கும்போது மிகவும் கஷ்டமாகிவிட்டது. அந்தப்பாத்திரத்தை ஏற்று நடித்த நான் ஒரு காலை மடித்துக்கட்டிச் செருகி நடித்தேன். காலை மடித்துக் கட்டியிருப்பது தெரிந்துவிட்டால் மக்கள் இரசிக்க மாட்டார்கள். சோகமும் இரக்கமும் வராது. அதனால் கட்டியிருப்பது தெரியாதமாதிரிக்கட்டியிருந்தேன். நான் அழுதழுது பாடுவதுபோல் ஒரு காட்சி. மேடைக்குப் போகும்போது கண்ணில் தண்ணீரை ஊற்றிவிட்டுச்சென்றேன் நடிக்க. ஆனால் நான் அப்பாத்திரமாக மாறியவுடன் என்னை அறியாமலேயே கண்ணீர் ஓடியது.

அதைப்பார்த்தவர்களும் அழுதார்கள். நடிப்புத்தான் என்றாலும் அதிலும் நிஜம் தெரிந்தால்தான் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது என் கருத்து. நிஜவாழ்க்கையில் காணும் பாத்திரங்களைப் பிரதிபலிப்பவன்தான் நடிகன். நடிக்க நடிக்கக்கிடைக்கும் அனுபவங்களைப்பெற்று நடிப்பவன்தான் முழுநடிகன். அவனால்தான் எல்லாப்பாத்திரங்களையும் அலங்கரிக்க முடியும்.

*☐ ஒரு அறிவிப்பாளரால் ரசிகர்களின் மனோநிலையை மிகவும் சுலபமாக இனம் கண்டுகொள்ள முடியும்.நீங்கள் அறிவிப்பாளராகக்கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் (நடனம், நாட்டிய நாடகங்கள்,கிராமிய நடனங்கள்,நாடகம், தனிநடிப்பு, வில்லிசை, மெல்லிசை என்பவற்றில்) ரசிகர்களின் மனோநிலைபற்றி அல்லது ரசனை உணர்வுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

நிச்சயமாக, ரசிகர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான மனோநிலை கொண்டவர்கள். அதனால்தான் ஒரு மேடையில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.நடனத்தைமட்டும் விரும்பும் ஒரு ரசிகரை பலதரப்பட்ட நிகழ்ச்சி நடைபெறுகின்ற மேடையில் எவ்வாறு திருப்திப்படுத்தமுடியும்? முடியாது. இதேபோன்றதுதான் மற்றவைகளும். எல்லா ரசிகர்களையும் ஒரே மேடையில் திருப்திப்படுத்தமுடியாது. இதை ரசிகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மெல்லிசைமட்டும் நடைபெறுகின்ற ஒரு அரங்கில் உள்ள ரசிகர்கள் தாங்கள் விரும்பும் பாடல்கள் எல்லாவற்றையும் கேட்க முடியுமா என்ன? ரசிகர்களின் மனோநிலை அறிந்துதான் மாற்றி மாற்றி நிகழ்ச்சிகளை நிரல் படுத்துகின்றோம். இருந்தும் அனைத்து ரசிகர்களின் ரசனைகளைப் புரியக்கூடியதாக இருந்தாலும் அதனைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை.

*☐ நிகழ்ச்சிகளைப் பார்க்கவருகின்ற இரசிகர்களைப்பற்றி பொதுவாக என்ன சொல்லவிரும்புகிறீர்கள்?*

கலைப்பற்றோடும் பசியோடும் வந்து நிகழ்ச்சிகள் முடியும்வரை பார்த்துரசித்துச் செல்பவர்கள் சிலர், பொழுதுபோக்குக்காக வருபவர்கள் சிலர், அறிந்தவர்கள் தெரிந்தவர்களுடன் அளவளாவுவதற்கு வருபவர்கள் சிலர் என்று ரசிகர்கள் பல ரகம். பொதுவாக ரசிகார்கள் பலர் தாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்கின்ற சில குறைபாடுகளையும் இங்கே சுட்டிக்காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். சில ரசிகர்கள் தமது பிள்ளைகளினதோ அல்லது தமக்கு வேண்டியவர்களதோ அல்லது தமக்குப்பிடித்தமானதாகவோ ஒரு நிகழ்ச்சி முடிவடைந்ததும் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படாது கதைக்கத் தொடங்கி விடுவார்கள். ஒரு சிலர் மண்டபத்திற்குள் வந்ததும் பிள்ளைகளைக் கைவிட்டுவிடுவார்கள். போகும்போதுதான் தேடிப்பிடித்துக் கூட்டிச்செல்வார்கள். பிள்ளைகளின் கூச்சலுக்கு எத்தனை ஒலிபெருக்கி வைத்தாலும் சமாளிக்க முடியாது.சில பிள்ளைகள் மின்சார ஒலிவாங்கி ஒலிபெருக்கி வயர்களையே கழற்றிவிடுவார்கள் என்றால் பாருங்கள் பெற்றோர்களின் அக்கறையை. ஜேர்மானியரது நிகழ்ச்சிகளில் தொடங்கிமுடியும்வரை சத்தமே இருக்காது. பிள்ளைகளைத் தம்மோடு அழைத்துவந்தால் தம்முடனேயே அமர்த்தி அவர்களுக்கும் நிகழ்ச்சிகள்பற்றி விளக்கமளித்து தாமும் ரசிப்பார்கள். இதை எமது பெற்றோரும்கடைப்பிடிக்கவேண்டும். சிலவேளைகளில் மண்டபத்திற்குள் உட்கார்ந்திருக்கும் ரசிகர்களைவிட அதிகமானோர் வெளியில் நிற்பார்கள்.

இவர்கள் கதைக்கிற சத்தம் மேடையில் வந்துமோதும். தாம் பார்க்க ரசிக்க விரும்பாவிட்டாலும் மற்றவன் பார்த்து ரசிப்பதற்கு இடைஞ்சல் செய்யாமல் இருக்கலாம் அல்லவா? முக்கியமான விடயம் என்னவென்றால் மண்டபத்திற்குள் சிற்றுண்டிகள் குளிர்பானங்களை உண்ணவேண்டாம்.அருந்தவேண்டாம் சுத்தமாக வைத்திருங்கள் என்றால் மண்டப வாயிலில் ஒருவர் கண்காணித்து நின்றாலும் அவரது கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு உள்ளே கடத்தி வந்து விடுவார்கள். பெரும்பாலும் பெற்றோர்கள் இக்கடத்தலுக்குப் பிள்ளைகளைத்தான் பயன்படுத்துவார்கள். நாங்கள் பத்துத்தடவைகள் அறிவித்தால் 10 நீலப்பைகளில் குப்பை அள்ளலாம். தவறுதலாகச் சொல்லாமல் விட்டால் தமிழாராய்ச்சி மாநாடு குழம்பின நேரம் இருந்த திறந்தவெளி அரங்கு மேல் என்று சொல்லலாம். குழந்தைகளுக்குக் கட்டுகின்ற விண்டிள் (Pampers) கூட கதிரைகளுக்குக்கீழே கிடக்குமென்றால் எங்கே போய் சொல்லி அழுவது? நிகழ்ச்சி 4 மணித்தியாலம் என்றால் 4மணித்தியாலம் துப்புரவு செய்யவேண்டும். பிரச்சினை என்னவென்றால் அடுத்தமுறை மண்டப உரிமையாளர்கள் மண்டபம் தர மாட்டார்கள். நிகழ்ச்சிவைக்க நாம் பேயாய் அலைய வேண்டும். நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களை உணர்ந்து, இத்தகைய குறைபாடுகளைக் கூடியவரையில் முற்றாகத்தவிர்க்க ரசிகர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*☐ மேலைநாடுகளில் தமிழ்க்கலைத்துறையின் எதிர்காலம் எப்படி இருக்குமென்று தாங்கள் கருதுகிறீர்கள்?*

மேலைநாடுகளில் தமிழ்க்கலைத்துறையின் எதிர்காலம் ஈழத்தில் தமிழ்க் கலைத் துறையின் எதிர்காலத்தை ஒத்ததாகவே அமையவேண்டும். புதிய கலை வடிவங்களாக இருந்தாலும் அக்கலை வடிவங்கள் ஈழத்தில் எதிர்காலக் கலைவடிவங்களைப் பாதிக்காத வகையில்அமையவேண்டும். இதை உணராத கலைஞர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது மண்ணின் பாரம்பரிய மிக்க கலைகளையும் அதன் வடிவங்களையும் பேணிப் பாதுகாக்கவேண்டும்.மேலைநாடுகளிலுள்ள கலைவடிவங்கள் எமது மண்ணிற்கு உகந்தவையாக இருந்தால் அதை நாம் எமது கலைகளோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். அதேபோன்று எமது கலைகளை இங்கே புகுத்தவேண்டும். போர்மேகம் சூழ்ந்த எமதுமண்ணிலேயே கலைகள் காக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறதென்றால்இங்கு ஏன் முடியாது? பிள்ளைகள் எக்கலைகளைக் கற்க விரும்புகிறார்களோ அதைக்கற்பதற்கு நாம் துணைபுரிந்தால் மிகவும் சிறந்த கலைஞர்களை நாம் வளர்க்கமுடியும். பெண்பிள்ளைகள் என்றால் பரத நாட்டியக்கலை ஒன்றுதான் என்கின்ற நிலை மாறவேண்டும். பெண்கள் மேலைத்தேச,கீழைத்தேசவாத்தியக்கலைஞர்களாக,பாடகிகளாக,அறிவிப்பாளர்களாக கலைத்துறையின் தொழில் நுட்பவியலாளர்களாக வர முயற்சிசெய்யவேண்டும். இன்று ஆண்பிள்ளைகள் பரத நாட்டியம் பழகி மேடையில் பெண்களுக்குச் சமமாக ஆடுகின்றார்கள் என்றால் பரதநாட்டியம் மட்டும்தானா பெண்களின் கலை? இதற்குப் பெற்றோர்களைக்காரணம் காட்டுகிறார்கள் பிள்ளைகள். பிள்ளைகள் விரும்பும் கலையைக் கற்கக்கூடிய பாதையை பெற்றோர்கள் அமைத்துக்கொடுக்க வேண்டும்.பிள்ளைகளின் கலைப்பாதையைத் தாம் நிர்ணயிக்கக்கூடாது. ஈழமண்ணில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஏற்றுச் செயற்பட்டால் தமிழ்க்கலைத்துறையின் எதிர்காலம் வெளிநாடுகளில் மேலும்


வெற்றியீட்டும்எப்போதும் அங்குள்ள மக்களோடு நாம் எம்மை இணைத்துச் செயற்படவேண்டும். இல்லையேல் நாம் அங்கு திரும்பும்போது ஒரு புதிய சமுதாயமாக அல்லல்படவேண்டும்.

☐ *அறிவிப்பாளர்களாக வளரத்துடிக்கின்ற — வளர்ந்து கொண்டிருக்கின்ற புதிய அறிவிப்பாளர்களுக்கு தங்கள் ஆலோசனைகள் எவை?*

முதலில் அறிவிப்பு என்பது ஒரு சாதாரணமான விடயமல்ல என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.ஒரு நிகழ்ச்சி சிறக்கப் பெரும்பங்கை வகிப்பவரும் அறிவிப்பாளர்தான். கலைஞர்களையும் மக்களையும் புரிந்துகொள்ளவேண்டும். பொறுமை கடல்போல் இருக்கவேண்டும். எந்த நிலை ஏற்பட்டாலும் மக்களை அமைதிப்படுத்தவும் சமாளிக்கவும் தெரிந்திருக்கவேண்டும். மக்களின் ரசனையைப் பொறுத்து நிகழ்ச்சிகளைத் தயார்படுத்தி நிரல்படுத்தவேண்டும். நிகழ்ச்சிக்குமுன் பங்குபற்றுகின்ற கலைஞர்களது கலைச்சரித்திரத்தை அறிந்து வைத்திருத்தல்வேண்டும். வேறு அறிவிப்பாளர்களது பாதிப்பு உண்டென்றாலும் தமக்கென்றோர் பாணியை அமைக்கவேண்டும். நாம் மேடைக்கு வருமுன் நமது வாயிலிருந்துவரும் வார்த்தைகள் சரிதானா என்பதை ஒரு தடவைக்கு மூன்று தடவை ஆராய்ந்து பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வளவும் நான் அனுபவத்தில் கற்றுக் கொண்டது.கற்பதற்கு இன்னும் கடல்போல் உள்ளது. கைமண்ணளவு கற்றதைக் கூறியிருக்கிறேன்.நீங்கள் கற்றவைகள் இருந்தால் கற்றுக்கொள்ள ஆவலாய் இருக்கின்றேன்.

☐ *இறுதிவினா வழக்கம்போல் பூவரசுபற்றியது. பூவரசுபற்றிய உங்களது கருத்து அல்லது விமர்சனம் என்ன?*

மண்ணின் மணம் வீசும் பூவரசே!
கவிதையில் தருகின்றேன் விமர்சனம் —
மாரியிலே வெட்டிய பூவரசுக் குழையெல்லாம்
மண்ணிற்குள் தாழும் — பின்
வளமான பயிரெல்லாம் அதன்மேல் தோன்றும்.
தோன்றுகின்ற பயிர்களுக்குப் பூவரசு எருவாகும்
பயிரும் பயன்தர வெட்டிய பூவரசு
மீண்டும் தழைக்கும்.
பல்கலையும் செய்திகளும் உள்ளடக்கித்
தழைத்துநிற்கும் பூவரசே!
பயிர்போல் நாம்வளர நீ எருவாகிறாய்!
கருத்துக்கூறக் குறையில்லாப் பூவரசே!
உன் பணி தொடர வாழ்த்துகிறேன்!



இனிய தமிழ் ஏபி.

## காலனுக்கு ஒரு தூது

இல்லறத்தில் இருந்து பட்டு
இனி வேண்டா மென வெறுத்து
கல்லறையில் இடம் கேட்டு
காலனுக்கு விண்ணப்பித்தேன்
கடைசி வரை பதிலில்லை
இங்கு வந்து பிறக்க
இறைவா நீ என்
எண்ணம் கேட்டதில்லை
கேட்டு வந்து பிறக்கவில்லை
கேடு கெட்டாலும் விடுவதில்லை
வீட்டைத் துறந்து ஒரு
வீதியில் யாசகம் வேண்டுமே
கூட்டைப் பிரித்துவிட்டால் — இந்தக்
குருவி பறந்து விடும்
மீண்டும் வந்து பிறப்பதென்றால்
மீளாய் துயில் என்ற
பிழையான சொல் எதற்கு
இறப்பது இயற்கை என்றறிந்தும்
இடையே சில நாள் வாழ்வின்
இனிப்பை சுவைப்பதில் என்ன பயன்
நான் இறந்து பட்டாலும்
நாளை இந்த உலகிருக்கும்
ஊனுடம் போடு சேர்ந்து
உயிரிருக்கும் போதே
நானென்ற அகத்தை
நலிந்து பட வேண்டும்
வானிடிந்த போதும்
நான் வருந்த மாட்டேன் — நீ
வாவென்று அழைக்கும் வரை
வாழ்வை கழிப்பேன் இனிதே!

- ப. இராஜகாந்தன்.

## சந்திப்போம் —
## சிந்திப்போம்!

*சந்திப்போம் சிந்திப்போம் என்னும் இந்தப் பகுதியில் பூவரசில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்கள் படைப்பாளர்களின் பதில்களுடன் இணைத்து வெளியிடப்படும். கருத்துமேடையாக இந்தப்பகுதியைப் பயன் படுத்திக் கொள்ள வாசகர்களை அழைக்கிறோம்.*

**பூவரசு நான்காவது ஆண்டுமலரில் கஶ்ரீதாஸ் எழுதிய 'பெண்' கட்டுரைபற்றி 'தமிழ்க்குருவி' விமர்சிக்கிறார்..**

ஶ்ரீதாஸைப் பொறுத்தவரை ஏதோ ஒரு நல்லதைத்தான் சொல்ல நினைக்கிறார் என்பது மட்டும் புரிகிறது. ஆனால் இவரது வார்த்தைப் பிரயோகத்திலுள்ள வறுமை இவரை எங்கோ இழுத்துச்செல்கிறது.
அரைகுறைப்பிரசவங்கள் அம்பலமேறக்கூடாது நண்பரே! நிறைவாகும்வரை மறைவாக இருந்தாற்றான் நாட்டுக்கும்நல்லது.நமக்கும் நல்லது.என்றால் இதன் கருத்து பட்டதாரியாகும்வரை எழுதக்கூடாது என்பதல்ல. நாம் சொல்லவந்த கருத்துடன் நமது ஆக்கம் நன்கு ஒன்றியிருக்கிறதா என்பதை எழுத்தாளன் என்னும் நிலையிலிருந்து இறங்கி வாசகன் என்னும் நிலைக்கு மாறி பல தடவைகள் படித்துப், பார்த்து திருத்தங்கள் ஏதும் செய்யவேண்டியிருப்பின் செய்து நிறைவாக்கியபின்தான் வெளியிடவேண்டும் என்பதே!

இனி உங்கள் கட்டுரைக்கு வருவோம்—
"பரம்பரைக் கௌரவம் என்று பத்தாம்பசலியாக வாழக் கூடாது!"
இதென்ன நியாயம் நண்பரே!
அதாவது கௌரவத்துடன்வாழ்ந்த பரம்பரையில்வந்தஒருவன் அக்கௌரவத்தை அழிக்க வேண்டும்.இன்றேல் அவன் பத்தாம்பசலி.அப்படித்தானே?
"எமது கலாசர்சாரங்களையோ பண்பாடுகளையோ விட்டுவிடச்சொல்லவில்லை!" என்று சொல்லிவிட்டு, கையோடு—
"பரம்பரைத்தீய வழிமுறைகள் ஒழியவேண்டும்" என்கிறீரே!
எமது கலாச்சாரங்களும் பண்பாடுகளும்கூட பரம்பரை பரம்பரையாகத்தானே வந்திருக்கின்றன. இவையெல்லாம் ஒழியவேண்டியவைதானா? ஒருசில சுயநலமிகளால் திசைதிருப்பப்பட்ட எமது பாரம்பரியங்களை— எமது பழக்க வழக்கங்களில் புகுந்துகொண்ட ஒரு சில தீயபண்புகளைக் களையவேண்டும் என்றால் ஓரளவு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.

இனி சாதி மதம் அந்தஸ்து கௌரவம் என்று அனைத்தையும் ஒரே தட்டில் வைத்துவிட்டீரே! சாதி என்பது அறவே ஒழிக்கப்படவேண்டியதுதான். மதம்

என்பதும் அவ்வாறுதானா? மதங்கொண்ட மதங்கள்தாம் ஒழிக்கப்படவேண்டும் நண்பரே! மதங்கள்தானே மனிதனைப் பண்படுத்துகின்றன. என்ன என்ன? இவையனைத்தும் போலிப்பதங்களா? இவையுடன் போலியைச் சேரவிடுதல்தான் தப்பு. போலிக்கௌரவம், போலிமதம், போலி அந்தஸ்து.... ஏன் போலிச் சாதி என்று கூடச்சொல்லலாம்

என்ன திகைப்பாக இருக்கின்றதா? சாதிஎன்பதும் உலகத்தில் அத்தியாவசியமான ஒன்றுதான். ஏன் இதிலும் முன்னுக்குப்பின் முரணாகத் தெரிகின்றதா?

சாதியிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ள படி.

இது ஔவைப் பாட்டியின் அழுத்தந்திருத்தமான கூற்று.
இந்தச் சாதிகள் என்றென்றும் நிலையாக இருக்கவேண்டியன.

இனி "ஏட்டிலும் மேடையிலும் பெண்ணுரிமைபற்றி எடுத்தியம்புபவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா" என்று பெருமூச்சுவிடும் அதேவேளை அந்த அடங்காத கணக்கில் நாமும் அடங்கிவிடுகிறோம் என்பது புரியவில்லையா.

ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்விக்கணைகளையே தொடுத்திருக்கிறார் நண்பர்.

"இருந்தும் என்ன? பெண்ணின் நிலையில்மாற்றம் தெரியவில்லை"

மாற்றம் தெரியவில்லை என்பது மட்டுமல்ல நண்பரே! தெரியமுடியாது. தெரியக் கூடாது! கணக்கிலடங்காக் காட்டுக் கூச்சல்களின் பின்னும் பெண் பெண்ணாகவே இருக்கிறாள் என்றால் இயற்கையின் வலிமையை இதிலிருந்து புரிந்துகொள்ளவேண்டும்.அதுமட்டுமல்ல நண்பரே! பெண்ணைப்பெண்ணாகவே இருக்கவிட்டு அவளுக்குரிய உரிமைகளை வழங்கவேண்டுமே தவிர அவளை ஆணாக மாற்றும் மந்திர ஜாலங்களிலெல்லாம் ஈடுபடக் கூடாது. அதாவது இயற்கையை வெல்ல, மாற்ற முயலக்கூடாது. அப்படி முயன்றால் இயற்கையின் பயங்கர சீற்றத்திற்காளாகவேண்டிநேரும்.இதைநன்குபட்டுத் தெளிந்தமையாற்றான், இம் மேலைநாடுகளெல்லாம் இன்று 'இயற்கையைப்பாதுகாப்போம்' என்று வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுகின்றன.

இவரின் அடுத்த கேள்வி

"பெண்ணின் வாழ்வில்மட்டும் ஏனிந்த இழிநிலைகள் திணிக்கப்படுகின்றன?" என்றால் ஆணின்வாழ்விலும் சேர்த்துத் திணித்துவிட்டாலென்ன? என்பது போலல்லவா இருக்கிறது? மனித சமுதாயத்திலிருந்தே இந்த இழிநிலைகள் அகற்றப்படவேண்டும் நண்பரே! சரி! அது பிடிக்கவில்லையெனில் தமிழ்ச் சமுதாயம் என்றுதான் எடுத்துக் கொள்ளுமேன்! இதைவிடுத்து ஆண்களையும் பெண்களையும் எதிரிகளாக்கி குடும்ப அமைப்பு என்ற ஒன்றைஇல்லாமற்செய்து மனிதசமுதாயத்தைவிலங்குக் கூட்டங்களாக்கமுயற்சிப்பது எந்தவகையில் நியாயம்? இனி இவர் மட்டுமன்றி பெரும்பாலானோர் தம்மை அறிவாளிகளாகக் காட்டிக்கொள்ளமட்டும் இராமாயணம் மகாபாரதம் என்று தமக்குத்தெரிந்தளவில் உதாரணங்காட்டுவர். ஆனால் அதன் அடிப்படைத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளவோ மறுப்பர். தத்தமது அறிவுக்கெட்டியபடி எள்ளி நகையாடவும் செய்வர். திரு. ஸ்ரீதாஸ் இராமாயணம்பற்றி என்ன சொல்கிறார் பார்ப்போம்

"நெருப்பிலே சீதையைத் தீக்குளிக்க வைத்தது இராமாயணமாயிற்று."

பிழையான கருத்தைக்கூட ஒரு ஒழுங்கான வசனத்தில் கூறவேண்டாமா? நீரிலே தீக்குளிக்க முடியுமா நண்பரே? அன்றியும் இராமாயண வரலாற்றின் காரணங்களாகப் பலவிதமான முற்பிறவிக்கதைகள் கூறப்பட்டாலும்

இராமாயணத்தில் தென்படும் முக்கியமான நிகழ்வு (Climax) இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றமையே. அதாவது அதில் வலியுறுத்தப்படும் விடயம் பிறன்மனை விழையாமை. மேலும் சிறுசிறு முக்கிய திருப்பங்களாக கூனியின் ஆவேசம், கைகேயிவரம் என்பவற்றைக் கூறலாமே தவிர தீக்குளிப்பு என்பது ஒரு சிறு சம்பவமே.தற்காலத்தில்கூட போலி அரசியல் தலைவர்கள் சிலர் அப்பாவி இளைஞர்களைத் தீக்குளிக்க வைக்கிறார்களே! இதை எந்தக்கணக்கில் சேர்த்துக்கொள்வது?

"இன்று பெண்களை நோகவைத்துத் தீக்குளிக்கும்...!"

தவறு நண்பரே! தீக்குளிக்கும் அல்ல தீமூட்டும் சம்பவங்கள்தாம் நடந்து கொண்டிருக்கின்றன.ஆனால் எங்கேநடக்கின்றன? அங்கேதான்போராடவேண்டும். யார்போராடவேண்டும்? பாதிக்கப்பட்ட அந்தச் சமுதாயமே போராடவேண்டும். அச்சமுதாயத்திலுள்ள சிந்தனையாளர்கள் — புத்திஜீவிகள் போராடவேண்டும். யாருக்கெதிராகப் போராடவேண்டும்? பெண்ணை அடித்தும் துன்புறுத்தியும் கொலைசெய்யும் காட்டுமிராண்டிக் கூட்டத்திற்கெதிராகப் போராடவேண்டும். இக்காட்டுமிராண்டிகளின்முடிவுதான் என்ன? ஒன்றில் இவர்கள் திருந்தவேண்டும். அல்லது திருத்தப்படவேண்டும். அதுவும் சரிவராத பட்சத்தில் அழிக்கப்பட வேண்டும்.

அடுத்து

"அவளும் ஒரு நடமாடும் ஜீவன்தானே?"

ஆடுமாடுகள்கூட நடமாடும் ஜீவன்கள்தான் நண்பரே! நடமாடும் ஜீவன் என்ற வகையிலா ஆராய்வது? அவளும் ஒரு பகுத்தறிவுள்ள — ஆசாபாசங்களெனும் உணர்ச்சிகளையுள்ளடக்கிய ஒருஜீவனல்லவா? இன்னுமொருபடி மேலேபோனால் சமுதாயம் என்னும் உடலின் சரிபாதி அங்கமல்லவா? அதன் உள்ளர்த்தமான உயிரும் அவளல்லவா? இதை 'நடமாடும் ஜீவன்' என்று ஒற்றைவார்த்தையில் அடக்கிவிட்டீரே!

"இந்த வரம்புகள் வகுக்கப்பட்டது யாரால்? சமுதாயமா? மக்களா?"

சமுதாயமுமல்ல, மக்களுமல்ல. சமுதாயத்திலுள்ள உம்மைப் போன்ற என்னைப் போன்ற சிந்தனையாளர்களால்தான். ஆனால் அதே சிந்தனையாளர்கள்சிந்தனைத் தெளிவு குறைந்தவர்களாக சுயநலமிகளாக இருக்கும்பட்சத்திற்றான் வரம்புகள் ஒருதலையாகின்றன. மறுபக்கத்திற்கு வரம்புகளைப் போடாமல் விட்டது தவறாகலாம். அல்லது போடப்பட்ட வரம்புகளை பாதுகாக்காமல்விட்டது தவறாகலாம். இதைவிடுத்து வரம்புபோட்டமையே தவறு என்றால், விலங்குகளுக்கும் மனிதகுலத்திற்கும் என்ன வித்தியாசம் காட்டப்போகிறீர் நண்பரே?

அல்லது விஞ்ஞானரீதியாக மனிதனும் விலங்கு எனப்படுவதால் விலங்குகள் போலவே வேட்டையாடி உண்டு காலங்கழிக்கலாம் என்பீரோ?

நீர் குறிப்பிட்டிருப்பதுபோல சீதனம் என்பது நமது சமுதாயத்தில் ஒருபெரும் பிரச்சினையாகத்தான் இருந்துவருகிறது ஆனால் இதை எவ்வாறு ஒழிப்பது? பூனைக்கு மணிகட்டுவது யார்?

எல்லோருக்கும் அதே பிரச்சனைகள் உண்டுதானே?

இதில் நீர்மட்டும் ஒருவேளை சீதனம்வாங்காமல் தியாகத்திருமணம்செய்யலாம் ஆனால் உமக்கு ஏழெட்டுப் பத்துச்சகோதரிகள் இருந்தால் வரும்வரன்கள் அத்தனையயுமே உம்மைப்போல எதிர்பார்க்கமுடியுமா? ஒவ்வொருவன் ஒவ்வொரு பிரச்சினைகளுடன் இருப்பான். நீர் தியாகிஎன்று பெயரெடுப்பதற்காக அவனவன் தன்தன் பிரச்சினைகளை விட்டுக்கொடுக்க முடியுமா? அல்லது

அவனவனின் சகோதரிகள்தான் வாழாவெட்டிகளாக முடியுமா? ஆக மொத்தத்தில் இது காலக்கிரமத்தில் தானாகவே அருகவேண்டிய பிரச்சினையே தவிர கொடி பிடித்துக்கூட்டம்போட்டு தீரக்கூடிய பிரச்சினை அல்ல என்பது புரிகிறதல்லவா?

மற்றப்படி பல நல்ல விஷயங்களையெல்லாம் அலசியிருக்கிறார் நண்பர்.
"பல இலட்சங்களைக்காட்டி பதவிகளையும் கௌரவங்களையும் வாங்க நினைப்பவர்கள்தாம் இங்கு ஏராளம்!"
"ஒருவன் பணத்தால் பெரியவனாவதில்லை. மனத்தால் பெரியவனாகவேண்டும்!"
"ஒரு பெண் சந்தர்ப்ப சூழ்நிலையால் விதவையாக்கப்பட்டாலும்கூட அவளை வெறுத்து ஒதுக்குகிறது இந்தச்சமுதாயம்."
"நான்கு சுவர்களுக்குள் பூட்டிவைப்பதால் மட்டும் பெண் என்ன கண்டாள்?"
சபாஷ் அருமையான கருத்து! இதைத்தானே வள்ளுவப்பெருந்தகையும் அடித்துக்கூறுகிறார்.
சிறைகாக்கும் காப் பெவண்செய்யும் மகளிர்
சிறைகாக்கும் காப்பே தலை.
ஆனால் நண்பரே! இவைமட்டுமல்லாது இன்னும்எத்தனை பிரச்சனைகள் நடைமுறையில் உள்ளன தெரியுமா?
நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இப்புலம்பெயர்ந்த மண்ணிலே கூட எம்மைப் போலவே நாட்டைவிட்டுத் தப்பியோடி வந்து அகதியானவர்களில் ஒரு சிலர் பொதுநல அமைப்புக்கள் சிலவற்றில் முக்கியபதவிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள் தாமே எனும் மனோநிலையுடன் உல்லாசவாழ்க்கை வாழ்கின்றனர்.ஆனால் சொந்தபந்தம் என்று சொல்லிக்கொள்ள இவர்களுக்குத் தாய்மண்ணில் அசையாத ஆதனங்கள் மட்டும்தான் உண்டு என்ற விடயம் இங்கு எத்தனை பேருக்குத்தெரியும்? தத்தமது பரிவாரங்கள் அத்தனையையுமே வெளிநாடுகளுக்கு இழுத்துவிட்டு ஒரு பொழுது போக்காக அல்லது தாய்மண்ணிலுள்ள தமது சொத்துக்களைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாகமட்டும் இதில் இயங்குபவர்கள் எத்தனைபேர்? இவர்களில் எத்தனை பேருக்குத் தாய்மொழியின் அரிச்சுவடியே தெரியாது.தமது குழந்தைகளுக்கும், அஜிபஜி,குஜி என்பதுபோல எந்தவொரு மொழியையுமே சாராத பெயர்களையும் வைத்துவிட்டு மம்மி, டாடி கலாச்சாரத்தையும் ஆரம்பித்து வைப்பவர்கள் இதற்குள் எத்தனை பேர்? இவையெல்லாம் வெளிச்சத்துக்கு வராத உண்மைகள். இது காலம்காலமாக நடந்து கொண்டிருந்தும் இதைத் தட்டிக்கேட்கும் துணிச்சல் நம்மில் யாருக்கு உண்டு? இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம். இவ்வாறானதொரு பிரகடனப்படுத்தப்படாத சர்வாதிகாரம் இங்கு தலைவிரித்தாடுவது தெரியவில்லையா? இவையெல்லாம் மனித உரிமைகளையே மண்ணாக்கும் செயல்களில்லையா? கேவலம்! மனித உரிமைகளே இல்லாத தமிழர்களாகிய நாம், எம்மில் ஒருபகுதியான பெண்களின் உரிமைக்காக முழக்கமிடுவது கோமாளித்தனமாக இல்லையா?
முதலில் சிந்தனையாளர்களான நாம் நமது சிந்தனைகளால் ஒன்று பட்டு தெளிவுபட்டு அச்சிந்தனைகளைச் சுதந்திரமாக வெளியிடக்கூடிய நிலையினை உருவாக்குவோம். அதன்பின் எம்மிடையேயுள்ள பிரச்சினைகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தீர்வு காண்போம்! என்ன நான் சொல்வது சரிதானா? உமது அறிவுபூர்வமான பதிலை எதிர்பார்த்து இத்துடன் இதை முடித்துக்கொள்கிறேன்.

போர்மேகம் சூழ்ந்து துயர இருள்படிந்த தாயக மக்களின் விடிவுக்காக நம்பிக்கையோடு செபிக்க, ஜெர்மனியின் கேவலார் நகரமரியன்னையின் திருப்பதியில், ஐரோப்பாவின் திக்கெட்டும் சிதறிவாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் 12.08.95 அன்று கேவலாரில் ஒன்றுகூடினர். தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சமாதானத்திற்கான திருயாத்திரை திருநாளின் முதல்நாளான 11.08.95 அன்று கெல்டன் புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகி திருப்பதியை வந்தடைந்தது.

— ஞானி.




அருள்மழை பொழிந்தனை
மனங்களில் நிறைந்தனை
கேவலார் நகர் அன்னையே!
வருதுயர் இனியிலை
வரமது வழங்கினை
வாழ்வினில் நீ துணையே!
ஒருகரம் உனதடி
தொழுதவர் மனந்தனில்
உறைந்தனை உயிரெனவே!
பிறிதொரு நினைவிலை
பிறந்தமண் துயர்நிலை
தவிர்ந்திட அருள்! அன்னையே!

— இந்துமகேஷ்.

# கலாச்சாரமும் சமுதாயமும்

இவை இரண்டுமே இணைபிரியாத — அதேநேரத்தில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளன.
நான் எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவன்?
எந்தவொரு கலாச்சாரத்தைப் பின்பற்றுகிறேன்?
இவை மிகவும் கடினமான கேள்விகள். உதாரணமாக நான் ஒரு இந்து. தமிழன். இந்துக்களுக்குள் சைவசமயத்தவன், தமிழர்களுக்குள் தமிழீழத் தமிழன். இப்படியாக இன்னும் உற்று நோக்கினால் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் ஒருவனாக....
எனவே எனதுகலாச்சாரம் என்ன என்பது ஓரளவுதான் தெளிவாக உள்ளது. ஆனால் எனக்கென்று ஒரு கலாச்சாரம் உண்டு என்பதைமட்டும் மறுக்க முடியாது. இனி எனது சமுதாயத்தைப்பற்றி நோக்கினால் அதில் யார்யார் அடங்குகிறார்கள்?
எனது சமுதாயத்தை குறுகிய பிரதேசத்தினுள் அடக்கினால் நாங்கள் கிராமத்தவர். இதற்குள் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் இன்னும் சிலவும் அடங்கும்.
அல்லது பரந்த அளவில் தமிழன் என்று நோக்கினால் இந்தியத்தமிழன், மலேஷியத்தமிழன், மொரீஷியஸ் தமிழன், தமிழீழத்தமிழன் என்று இன்னோரன்ன பிரிவுகளுக்குள் அடங்கும்.
இத்தோடு சமுதாயத்தைக் காலத்தோடுகூட நோக்கலாம். ஒரே இடத்தில் பிறந்து வாழும் எனது பெற்றோர் சமுதாயம்வேறு. நான் வாழும் சமுதாயம் வேறு. எனது சந்ததி புதிய ஒரு சமுதாயத்தைப் பிறப்பிக்கும். ஆனால் நாங்கள் ஒரே கலாச்சாரத்தையே பின்பற்றுகிறோம்.
அப்படியானால் சமுதாயம் கலாச்சாரத்தில் சில மாற்றங்களை உருவாக்குகின்றதா?

சத்தியத்தைச் சொல்பவனைச் சத்துருவாய்க்கருதுபவன் சத்தியத்தைக் கொல்லுபவன். அவனது பாதை பிழையானது. அதில் அநீதியே நடமாடுகின்றது.
அதை அவன் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பதன் நோக்கம் அவனது சுயநலத்தைக் காத்துக் கொள்வதற்கேயாகும்.
ஆனால் நீதியே நிலையானது.
அது தனது முழுச்சக்தியையும் வெளிப்படுத்தும் காலம் வரின் அநீதியின் கால்கள் முறிக்கப்பட்டுவிடும்.
அதற்கான பாதையைத்தெரிந்தெடுத்து மக்களின் விடுதலைக்காக உழைத்த உண்மையான உத்தமர்களின் புண்ணியத்தினாலேயே உலகில் மனிதத்துவத்தின் மகிமை காக்கப்பட்டுக்

உதாரணமாக இஸ்லாம் மதத்தில் முகம்மது நபிகள் மாற்றங்களைச் செய்துள்ளார் என்றால் அவர் அவருடைய சமுதாயத்தைத் தேவைக்கேற்ப மாற்றியிருக்கவேண்டும். அதனையே அவர்கள் இன்றும் பின்பற்றுகிறார்கள். எனவே கலாச்சாரத்தில் சமுதாயத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்யப்படலாமா? அதே தேவைகள் காலப்போக்கில் அவசியப்படாதவிடத்தும் நாங்கள் அவற்றைத்தொடரலாமா?
இரண்டாவது மகாயுத்தம் ஜேர்மனியில் பெரும் மாற்றத்தை உண்டாக்கிற்று. இதுபோன்று பல தேசங்களில் பல தேவைகள் ஏற்பட்டபோது மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக எங்கள் கலாச்சாரத்தில் மற்றவர்களின் ஆட்சியின்கீழ் மாற்றங்கள் கொண்டவரப்பட்டன. ஆனால் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி எங்களுக்கு சுதந்திரம் கிடைத்தும் அவை ஏன் இன்னும் எங்களை விட்டுப்போகவில்லை?
எது எவ்வாறாயினும் எங்களில் சிலவற்றை மாற்றமுடியவில்லை. எனவே நாங்கள் அடிப்படையில் மாறமுடிவதில்லை. பாதைகள் மாறலாம். அவை போய்ச்சேரும் இடம் ஒன்றாகவே இருக்கமுடியும். எங்கள் கலாச்சாரம் என்பது அடிப்படையாகவே எங்கள் இயல்புகளில் பொதிந்துகிடக்கிறது. இதைத் தனிமனிதர்கூட தம்தேவைக்கேற்ப மாற்றமுயல்கிறார்கள். கலாச்சாரம் என்பது ஒரு சமுதாயம் நல்லவழியில் செல்வதற்காகவே! அல்லது ஒரு வழி தடைப்பட்டிருந்தால் மட்டுமே (உதாரணமாக வேட்டி கட்டும் கலாச்சாரம் பனிகொட்டும் நாடுகளில் மாற்றம் வேண்டுவதுபோல்) வேறு வழியில் செல்ல முயலும்போது நன்மையாக அமையும். எனவே மனிதன் கலாச்சாரத்தை மாற்றாமல் தேவைக்கேற்ப பாதைகளை மாற்றுகிறான் என்றே கூறலாம்.

— விஜயானந்தா.

அடுத்த இதழில்- **சமுதாயமும் மனிதபண்பாடும்.**

கொண்டிருக்கின்றது. இந்த மாபெரும் உண்மையின்பாதையில் தம் சுவடுகளைப் பதித்துவைத்து மறைந்த சரித்திர நாயகர்கள் உலகின் பொதுச்சொத்தானவர்கள்.
அவர்களின் வரலாற்றின் சிறுதுளிகள்கூட பெரும்மாற்றத்தை மனிதர் வாழ்க்கையில் ஏற்படுத்தும் சக்திவாய்ந்தவை.

---

---

எழிலன் எழுதும்

**சத்தியத்தின் சுவடுகள்.**

**பூவரசு அடுத்த இதழிலிருந்து ஆரம்பம்.**

auf= மீது.

Ich gehe auf die Straße (Wohin)

நான் வீதிமீது போகின்றேன்.

Ich bin auf der Straße

நான் வீதியில் நிற்கின்றேன்.

hinter= பின்னால்

Gehen Sie hinter das Haus!

வீட்டுக்குப் பின்னால் போங்கள்!

Der Garten ist hinter dem Haus.

தோட்டம் வீட்டுக்குப் பின்னால் உள்ளது.

neben =அருகாமையில்.

Fahren Sie das Auto neben das Haus!

வீட்டுக்கு அருகாமையில் மோட்டார் வண்டியை ஓடஇடுங்கள்!

Die Garage ist neben dem Haus

கராஜ் வீட்டுக்கு அருகாமையிலுள்ளது.

in= உள்ளே (க்கு)

Heute gehen wir ins Kino.

இன்று நாங்கள் சினிமாத்தியேட்டருக்குப் போகின்றோம். (படம்பார்க்க)

Die Kinder sind im Kino.

பிள்ளைகள் சினிமாத்தியேட்டரில் இருக்கின்றார்கள்.

in+das=ins

in+dem= im

über= மேலே

Wir hängen die Lampe über den Tisch.

நாங்கள் மேசைக்கு மேலே விளக்கைத் தொங்க விடுகிறோம்.

Die Lampe hängt jetzt über dem Tisch.

விளக்கு இப்போது மேசைக்கு மேலே தொங்குகின்றது.

unter = கீழே.

Ich gehe unter den Balken

நான் இப்போது பல்கனிக்குக் கீழே போகின்றேன்.

Jetzt stehe ich unter dem Balkon.

நான் இப்போது ப்ல்கனிக்குக் கீழே நிற்கின்றேன்.

vor = முன்பாக.

Ich fahre vor die Garage

நான் கராஜுக்கு முன்பாக (வண்டியை) ஓட்டுகிறேன்

Mein Auto steht vor der Garage

எனது மோட்டார்வண்டி கராஜுக்கு முன்பாக நிற்கின்றது.

Zwischen (ஏதாவது இரண்டிற்கும்) இடையில்

**Legen Sie das Heft zwischen die Bücher!**
கொப்பியை புத்தகங்களுக்கிடையில் வைக்கவும்!

**Das Heft ist zwischen den Büchern.**
புத்தகங்களுக்கிடையில் கொப்பி இருக்கின்றது.
**stehen** = நிமிர்ந்து நிற்றல், பொருட்களை நிமிர்த்தி வைத்தல்.
**legen** = சமாந்தரமாக வைத்தல்
**das Buch** = புத்தகம்.
**die Bücher** = புத்தகங்கள்.

**an+dem = am , an+das = ans.**
மேற்குறிப்பிட்டவை
**Akkusativ** இலும் **Dativ** இலும் அமைந்துள்ளது.
**Wohin** = எங்கே எதை நோக்கி எனக் கேட்கப்படும் வசனங்கள்
**Akkusativ** இலும்
எங்கே எனக்கேட்கப்படும் வசனங்கள் **Dativ** இலும்
அமைந்துள்ளதைக் காணலாம்.

அவதானிக்கவும்! —
**Ich gehe auf die Straße (wohin)-Akk.**
நாம் தொழிற்படும்போது — **auf die Straße** எனவும்,
தொழிற்பாட்டிற்றிருப்பதால் — **auf der Straße** எனவும்
வசனங்கள் அமைந்திருக்கின்றன.
இதேபோல் நாம் ஒரு பொருளை வைக்கின்றபோது, அதாவது
மேசையின்மேலே புத்தகத்தை வைக்கின்றேன் என்றால் —
**Ich lege das Buch auf den Tisch** எனவும்
புத்தகம் மேசையில் இருக்கின்றது என்றால்
**Das Buch legt auf dem Tisch** எனவும் வரும்

**auf den Tisch** = மேசையின்மேலே
**auf dem Tissch** = மேசையில். (தொடரும்)

---

(சென்ற இதழில் ஒரு திருத்தம்
Kannst du heute abend **zu kommen?** என்றிருப்பதை
Kannst du heute abend **zu mir kommen?** என்றும்
இன்று காலை நீ என்னிடம் வரமுடியுமா என்றிருப்பதை
இன்று மாலை நீ என்னிடம் வரமுடியுமா? என்றும் திருத்திக்கொள்ளவும்)

---

## உங்களுக்குத்தெரியுமா?

பறவையைக்கண்டான்
விமானம்படைத்தான்.

ஆதிமனிதன் சிந்திக்கமுற்பட்ட காலம் பறவைகளின் கட்டுப்பாடற்ற உற்சாகமான பறத்தலைப்பற்றி சிந்தித்தான்.வியப்பினால் விழிகளை விரித்தான் நானும் ஏன் இப்படி சுதந்திரமாய் பறக்கக்கூடாது .
இந்தக் கேள்விக்கு பதில்காண மலைக்கழுகின் இறக்கைகளைக்கட்டி மர உச்சியிலிருந்து பறக்கமுயன்று மண்ணில் விழுந்து பரிதாபமாய் மாண்டான். ஆனால் அவன் சிந்தனையில் உதித்த கருத்து மாறவில்லை.
பல்லாயிரம் ஆண்டுகளின்பின் புட்பகம், வான ஊர்தி என்றெல்லாம் எம் புராண இதிகாசங்களில் பலர் வான்கலங்கள்பற்றிப் பாடி எழுதிவிட்டுச் சென்றனர். ஆனால் அப்பொழுதும் விமானம் உருவாகிவிடவில்லை.
கி.பி. 17ம் நூற்றாண்டில் பிரான்சிய விஞ்ஞானிபலமுறை பறக்கமுயன்று தோற்றுவிட இத்தாலிய லியனார்டோ டாவின்சி பரசூட்மாதிரி பொறிகளோடு பறக்கமுயன்று வெல்லமுடியாவிட்டாலும் யந்திரக்கருவிகளின் துணை கொண்டு காற்றுமிதப்பொன்றை உருவாக்க எண்ணி பலூன் மாதிரியானவற்றையும் சிந்தித்து தன் பறத்தல் சம்பந்தமான கருத்துக்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு நூலாக்கி வெளியிட்டார்.
இவரை அடியொற்றி பலூன் தயாரித்து வானத்தில் சில நொடிகள் பறந்த ஒருவர் காயம்பட்டு இறக்க ஆட்டோ லியந்தால், ஆக்டோல் வுலூட் எனும் இருவர் விமானம் தயாரித்து பறந்து பார்த்து அவர்களும் மண்ணில் உறங்க, இந்த தொடர் சிந்தனையோட்டத்தில் 1853ல் கெய்லி எனும் பிரித்தானியர் கிளைடர் விமானத்தை கண்டுபிடித்தது ஒரு புறமிருக்க அனைவரின் அனுபவங்களையும்சேர்த்து தாமும் சிந்தித்து ஆர்வில் ரைட், வில்பர் ரைட், எனப்படும் ரைட் சகோதரர்கள் தாம் வடிவமைத்த நவீன விமானத்தில் ஆர்வில் 37 மீற்றர் தூரத்தை 12வினாடிகளில் கடக்க, வில்பர் 59 நொடிகளில் 260 மீற்றர் தூரத்தையும் 1903ல் பறந்து தரையிறங்கினர்.
இந்த வெற்றி நிகழ்ந்து நாலாண்டுகளில் 1907ல் பிரான்சிய விஞ்ஞானியான கோன்ஸ் என்பவர் இருந்த இடத்திலிருந்தே கிளம்பிப்பறந்து நினைத்த இடத்தில் தரையிறங்கும் கெலிகொப்டரைக் கண்டுபிடித்தார். (உலங்கு வானூர்தி. உலங்கு — வண்டு) விமானம் பறப்பதற்கு ஏற்படும் சிரமங்கள் கெலிகொப்டருக்குக் குறைவு என்பது சிறப்பானது. பின்னாளில் விமானத்திற்கான இயந்திரங்களை வடிவமைத்து உருவாக்கியவர் பிரித்தானிய விஞ்ஞானி விட்டில்.
இன்று கிரகம்மாறி தாவும் ராக்கெட்டுகள்வரை கண்டுபிடிக்கப்பட்டாலும் பறத்தல்பற்றி சிந்தித்து மரஉச்சியிலிருந்து விழுந்துவிட்ட ஆதிமனிதர்களின் முயற்சி மதிக்கப்படவேண்டியதே.

~இதய பவன் பக்கம்.

# ஜேர்மனி 'இளைஞன்' மாத இதழ் நடாத்தும் மாபெரும் கவிதைப்போட்டி!



உலகுவாழ் ஈழத்தமிழ் எழுத்தாளர்களே!, கவிஞர்களே! இதோ உங்கள் திறமைக்கு ஓர் பரீட்சை. கீழே காணப்படும் படத்திற்கு பொருத்தமாக 1—15 வரிகளுக்குள் அடங்கக்கூடியதாக ஓர் கவிதை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

(படத்தின் கருத்து படத்தைப் பார்த்தால் தெரியும் என்று நினைக்கிறோம். இருப்பினும் சுருக்கமாக-சோகங்களால் எரிந்து கொண்டிருக்கும் தமிழீழத்தைப்பார்த்து அயல் நாடான இந்தியா நமட்டுச்சிரிப்பு சிரிப்பதையும், தமிழீழத்தாய் உலகுவாழ் ஈழத்தமிழர்களிடம் பிச்சை கேட்பதையும், அதற்கு (சில) ஈழத்தமிழர்கள் தங்கள் குழந்தைகளின் கண்களையும், தங்கள் கண்களையும் பொத்திக்கொண்டு இருப்பதையுமே படத்தில் காண்கிறீர்கள்.)

முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்கு-சுமார் 300 பிராங் பணத்தொகை பரிசாக காத்திருக்கிறது. இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்கு 150 பிராங் காத்திருக்கிறது. மூன்றாவதாக தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்கு "இளைஞன்" மாத இதழுக்கான ஒரு வருட சந்தா இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

*முடிவு திகதி: 30. 09. 95 க்கு முன்னர் எமக்கு கிடைக்ககூடியதாக அனுப்பி வையுங்கள்.*


முகவரி-
"ELAIGNAN" TAMIL MONTHLY
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel: 069/704439

உங்கள் அபிமானப் பத்திரிகை

# தமிழருவி

நடாத்தும்

## 3வது வருடாந்த இசைவிழாவும்
## கலைஞர்கள் கௌரவிப்பும்

# எசன் மாநகரில்!

*30.09.1995* சனிக்கிழமை பி.ப.*2.00* மணிக்கு
Hentri-Dunat Str. Universitat Alterph.Essen.
Ruttenscheid. மண்டபத்தில்.

பிரதம விருந்தினர்; -
தமிழறிஞர் பேராசிரியர் **திரு.பீற்றர்சல்க்.**
(உப்சலா பல்கலைக்கழகம்.சுவீடன்)
கௌரவ விருந்தினர்; -
ஈழத்து முதுபெரும் எழுத்தாளர் **எஸ்.அகஸ்தியர்.**
பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன்
இம்முறை இசைப் போட்டியில்
9 இசைக்குழுக்கள் பங்குபெறுகின்றன.

சஹானா (பேர்லின்), ஜங்ஸ்ரார் (மொன்சன்கிளாட்பாக்)
கலைநிலா( பிறேமன்),சன்றைஸ் (வூற்ஸ்பேர்க்)
தமிழ்மன்றம் (பிராங்க்பேர்ட்),சுப்பர் பிறின்ஸ் (மோர்ஸ்)
புதியநிலா (பிறைபேர்க்),ராகாஸ் (கேள்ன்)
புதியநிலா (வெஸ்ரர்வல்ட்)

தமிழருவியால் நடாத்தப்பட்ட கதை, கவிதை, கட்டுரைப்போட்டிகளில்
பரிசுபெற்றோருக்கான பரிசில்களும் விழாவில் வழங்கப்படும்.

"தமிழுக்குத் தொண்டு செய்வோம்! தமிழால் ஒன்றிணைவோம்!"

நுழைவுக்கட்டணம் அன்பளிப்பாக — 12 DM.
( 5வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்)
தாயகத்தில் ஊனமுற்றோருக்கான நிதியுதவி மேடையில்வைத்துவழங்கப்படும்.

***'அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!'***

**தொடர்புகளுக்கு: 0301.668809-370586 (T.F.G.eV.)**